25.07.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஆகஸ்ட் முதல் வாரத்தில் மேட்டூர் அணை திறப்பு?**

பாசன வசதிக்காக மேட்டூர் அணை ஆகஸ்ட் முதல் வாரத்தில் திறக்க வாய்ப்புள்ளதாக, சேலம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் சேலம் வேளாண்மை இணை இயக்குநர் என்.இளங்கோ தெரிவித்தார்.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வி.சம்பத் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திப்பேசினர்.

"அம்மா' உணவகங்களைப் பேரூராட்சி, கிராமப்புறங்களிலும் திறக்க தமிழக அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டும். மரவள்ளிப் பயிருக்கு உரிய விலை நிர்ணயம் செய்ய வேண்டும். வசிஷ்ட நதியில் செய்யப்பட்டுள்ள 214 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

இதில் கலந்துகொண்ட வேளாண் இணை இயக்குநர் என்.இளங்கோ கூறுகையில், ""டெல்டா மாவட்டங்களின் சார்பில் தண்ணீர் திறந்துவிடக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பொதுப்பணித் துறை சார்பில் அரசுக்குப் பரிந்துரைத்து கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி, ஆகஸ்ட் முதல் வாரத்தில் மேட்டூர் அணை திறக்க வாய்ப்புள்ளது" என்றார்.

**"தமிழக காய்கறிகளில் நச்சுத்தன்மை: கேரளத்தின் புகாரில் உண்மையில்லை'**

தமிழக காய்கறிகளில் அதிக நச்சுத்தன்மை உள்ளதாக கேரளம் அளித்துள்ள புகாரில் உண்மையில்லை என்பது ஆய்வின் மூலம்

உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் த.ந.ஹரிகரன் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் அ.மு.நாகேந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் த.சம்பத்குமார் ஆகியோர் முன்னிலை விகித்தனர். கூட்டத்தில் நடைபெற்ற விவாதம்:

தமிழகத்தில், குறிப்பாக திண்டுக்கல், தேனி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளில், அதிக நச்சுத் தன்மை உள்ளதாக கேரள மாநிலத்தில் அவதூறு பரப்பப்படுகிறது. மாடித் தோட்டம் மூலம் காய்கறி சாகுபடி செய்யும் திட்டத்தை பொதுமக்களிடம் பிரபலப்படுத்துவதற்காக, இதுபோன்ற பொய் பிரசாரத்தை கேரள உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர் என, விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஆர்.சச்சிதானந்தம், வீரப்பன் மற்றும் விவசாயிகள் புகார் தெரிவித்தனர். கேரளத்தின் பொய் பிரசாரத்தை தடுப்பதற்கு, தமிழக அரசு சார்பில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதற்கு பதில் அளித்து வேளாண்மை இணை இயக்குநர் சம்பத்குமார், தோட்டக்கலை துணை இயக்குநர் (பொறுப்பு) கே.ஜெ.கிஷோர்குமார் ஆகியோர் தெரிவித்தது: கன்னியாகுமரி, நெல்லை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் விளைவிக்கப்படும் காய்கறிகளை, கேரள உணவுப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு பார்வையிட்டனர். காய்கறியில் உள்ள நச்சுத் தன்மை குறித்து, மாதிரிகளை சேகரித்து அவர்கள் ஆய்வு செய்யாமலே, தவறான தகவலை தெரித்துள்ளனர்.

கேரளத்தின் குற்றச்சாட்டு குறித்து தெளிவுபடுத்துவதற்காக, 4 மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளின் மாதிரிகள் மூலம் ஆய்வு செய்யப்பட்டது. திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 93 மாதிரிகள்

ஆய்வுக்கு அனுப்பப்பட்டன. அதில், 2 மாதிரியில் மட்டுமே பிரச்னை இருந்தது. இதனால், நச்சு பாதிப்பு இருப்பதாக கூறியது பொய்யானது என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே, காய்கறி பயிர்களுக்கு குறைவான பூச்சிகொல்லி மருந்து பயன்படுத்தும் மாநிலம் தமிழகம் என்பது மீண்டும் உறுதிப்பட்டுள்ளது என தெரிவித்தனர்.

**விவசாயிகளின் நிலத்தைப் பறிக்க அனுமதிக்கமாட்டோம்: ராகுல் காந்தி**



விவசாயிகளின் அனுமதியின்றி அவர்களது நிலத்தை மத்திய அரசு பறிப்பதற்கு காங்கிரஸ் அனுமதிக்காது என்று அக்கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார். நிலம் கையகச் சட்டத் திருத்தத்துக்கு எழுந்த எதிர்ப்பிலிருந்து, நாட்டிலுள்ள விவசாயிகளின் வலிமை என்ன? என்பதை பிரதமர் நரேந்திர மோடி புரிந்து கொண்டிருப்பார் என்றும் அவர் கூறினார்.

பஞ்சாப், மகாராஷ்டிரம், தெலங்கானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் நடைப்பயணம் மேற்கொண்டு விவசாயிகளை நேரில் சந்தித்து, குறைகளைக் கேட்டறிந்த ராகுல் காந்தி, ஆந்திர மாநிலத்தில் அனந்தப்பூர் மாவட்டத்தின் ஓபுலதேவரா கிராமத்தில் இருந்து தனது நடை பயணத்தை வெள்ளிக்கிழமை தொடங்கினார்.

அப்போது விவசாயிகளிடையே அவர் பேசியதாவது:

கடந்த 1979-ஆம் ஆண்டு, மறைந்த பிரதமர் இந்திரா காந்தி

ஆந்திரத்துக்கு வந்து பொதுக்கூட்டத்தில் பேசினார். அப்போது ஆந்திர மக்களுக்கும் இந்திராவுக்கும் இடையே ஒரு பிணைப்பு இருந்தது. அதேபோன்ற உறவு, தற்போது உங்களுக்கும் எனக்கும் இடையே உள்ளது. இந்திரா விட்டுச் சென்ற சிந்தனைகளும், கொள்கைகளும் என் மனதில் மட்டும் இல்லை. எனது ரத்தத்திலும், நரம்பிலும் அவை கலந்துள்ளன.

முந்தைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நிலம் கையகச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பெரும்பான்மையான விவசாயிகளின் ஒப்புதலின்றி நிலத்தைக் கையகப்படுத்தக் கூடாது என்ற அம்சம் அதில் இடம்பெற்றிருந்தது. நிலத்தைக் கையகப்படுத்தும்போது, விவசாய நிலங்களிலும், பண்ணைகளிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கு அதில் பங்கு தர முந்தைய மசோதாவில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. நிலம் கையகப்படுத்தி, 5 ஆண்டுகளுக்குள் எந்தவிதமான வளர்ச்சிப் பணிகளும் தொடங்கப்படாவிட்டால், அந்த நிலத்தை விவசாயிகளிடமே திரும்ப ஒப்படைக்க வேண்டும் என காங்கிரஸ் அரசு நிறைவேற்றிய மசோதாவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த அம்சங்களை எல்லாம் மத்திய பாஜக அரசும், பிரதமர் நரேந்திர மோடியும் மாற்றிவிட்டனர். விவசாயிகளின் நிலத்தை கைப்பற்றித் தருகிறேன் என பிரதமர் மோடி தனது நண்பர்களிடம் எழுதப்படாத சத்தியத்தை அளித்துள்ளார். இந்த மக்களின் (விவசாயிகள்) ஆதரவுடன்தான் பிரதமர் மோடி ஆட்சி அதிகாரத்துக்கு வந்தார். ஆட்சிப் பொறுப்பேற்ற பின், விவசாயிகளின் ஆதரவுடன் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்து முடிப்பேன் என்று அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்து இருந்தார். அதேவேளையில், விவசாயிகளின் நிலங்களை சுலபமாக பறித்துடலாம் என மோடி எண்ணியிருந்தார். ஆனால், விவசாயிகளின் ஒப்புதல் இல்லாமல் அவர்களது நிலத்தை யாரும் பறித்துவிடக் கூடாது என காங்கிரஸ் உறுதியான நிலைப்பாட்டை எடுத்தது.

அதன் அடிப்படையில் விவசாயிகளும், காங்கிரஸ்ும் அந்த சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிராகப் போராடி வருகிறோம். நாட்டிலுள்ள 10 சதவீத விவசாயிகள் மட்டுமே நிலம் கையக மசோதாவுக்கு எதிராக தங்களது வலிமையைக் காட்டியிருப்பார்கள். அதிலிருந்தே

விவசாயிகளின் பலம் என்ன? என்பதை மோடி புரிந்துகொண்டிருப்பார். நிலம் கையகப்படுத்துதல் விவகாரத்தில் விவசாயிகளுக்கு அழுத்தம் கொடுக்க முடியாது என்பதை அவர் தெரிந்துகொண்டார். ஆந்திர மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்குவதற்கும், போலாவரம் நீர்ப்பாசனத் திட்ட விவகாரத்திலும் மோடி அக்கறை காட்டுவதில்லை. ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவும், மாநில எதிர்க்கட்சிகளும் இந்த விவகாரங்களுக்கு குரல் கொடுக்க ஏன் பயப்படுகின்றன? உங்கள் எதிர்காலத்தில் ஏன் அவர்கள் சமரசம் செய்து கொள்கிறார்கள்? காங்கிரஸ் கட்சியைப் பொருத்தவரை ஆந்திர மக்கள் நலனில் நாங்கள் எந்த சமரசமும் செய்துகொள்ள மாட்டோம். உங்களுக்காகப் போராட எப்போதும் தயாராக இருப்போம் என்றார் ராகுல் காந்தி. **பாஜக விமர்சனம்**

புது தில்லி, ஜூலை 24: மத்திய அரசு மீதும், பிரதமர் நரேந்திர மோடி மீதும் ராகுல் காந்தி முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் பக்குவமற்றவை என்று பாஜக விமர்சித்துள்ளது.

இதுகுறித்து பாஜக மூத்த தலைவரும், மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சருமான பிரகாஷ் ஜாவடேகர் தில்லியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பிரதமரை, ராகுல் இவ்வாறு விமர்சிப்பது, அவரது பக்குவமற்ற நிலையையும், பொறுப்பற்ற தன்மையையுமே காட்டுகிறது. பொது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நாகரீகத்தின் எல்லையை ராகுல் காந்தி கடந்துவிட்டார். குற்றம்சாட்டிவிட்டு, ஓடி ஒளிந்து கொள்ளும் நடவடிக்கைகளில் ராகுல் ஈடுபட்டு வருகிறார். இதை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று பிரகாஷ் ஜாவடேகர் தெரிவித்தார்.

**"கரும்பு நிலுவைத் தொகை விரைவில் அளிப்பு'**

கரும்பு விவசாயிகளுக்கு இந்த மாத இறுதிக்குள் நிலுவைத் தொகை வழங்கப்படும் என மாவட்ட வருவாய் அலுவலர் முத்து கூறினார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அலுவலர் முத்து தலைமை வகித்தார். இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் தங்களது கோரிக்கைகள் குறித்து பேசினர். பின்னர்,

வேளாண்மைத் துறையின் இணை இயக்குநர் பாபு பேசியதாவது: வேளாண்மை பல்கலைக்கழக வானிலை முன்னறிவிப்பின்படி, திருவள்ளூர் மாவட்டத்தில் தென் மேற்கு பருவமழை இயல்பான அளவில் பொழிய வாய்ப்புள்ளது. இதுவரை சொர்ணவாரி பருவத்தில் நெல் பயிர் 19,600 ஹெக்டேரும், திருந்திய நெல் பயிர் 15,500 ஹெக்டேரும், கரும்பு நடவில் 600 ஹெக்டேரும், கரும்பு மறுதாம்பில் 3,100 ஹெக்டேரும் பயிரிடப்பட்டுள்ளன. திருத்தணி, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு வட்டங்களில் மழையின்மையால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், கரும்பு சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

சோழவரம் வட்டத்தில் தோட்டக்கலை பயிர்களில் மாவுப் பூச்சியின் தாக்குதல் உள்ளது. தென்னையில் காண்டாமிருக வண்டு பாதிப்பும் உள்ளது. தேவையான மருந்துகளையும், முறையான பயிர் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தினால், இந்த நோய்களைக் கட்டுப்படுத்தலாம் என்றார். இதையடுத்து, மாவட்ட வருவாய் அலுவலர் முத்து பேசியதாவது:

சம்பா பருவத்துக்குத் தேவையான நெல் விதைகள், பசுந்தாள் உர விதைகள், ஜிப்சம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆதார் அட்டை விடுபட்டவர்களுக்கு விரைவில் வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை இம்மாத இறுதிக்குள் வழங்கப்பட்டு விடும் என்றார். இதைத் தொடர்ந்து கடந்த மாதத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

துணை ஆட்சியர் ராகுல்நாத், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுப்பிரமணியன், வருவாய்க் கோட்ட அலுவலர்கள் நாராயணன், சேது மாதவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். காய்ந்த கரும்புடன் வந்த விவசாயிகள் வறட்சி மாவட்டமாக திருவள்ளூரை அறிவிக்க வலியுறுத்தி, காய்ந்த கரும்பு பயிருடன் விவசாயிகள் வந்தனர். மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் வேறு அலுவல் காரணமாக

கூட்டத்தில் பங்கேற்காததால் விவசாயிகள் அதிருப்தியுடன் திரும்பினர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:

திருவாலங்காடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு பேரம்பாக்கம், திருத்தணி, ஊத்துக்கோட்டை, திருவாலங்காடு, ஆர்.கே. பேட்டை, பள்ளிப்பட்டு, பொதட்டூர்பேட்டை உள்ளிட்ட சுற்றுப்புறக் கிராமங்களில் இருந்து 2 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கரும்பு பயிரிடப்பட்டு அனுப்பப்பட்டு வருகிறது.

கடந்த 3 ஆண்டுகளாக பருவ மழை பொய்த்த நிலையிலும், மணல் திருட்டால் ஆறுகளும், பல ஏரிகளும் சுரண்டப்பட்டன. இதனால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. எனவே, விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை அரசு அளிக்க வேண்டும் என்றனர்.

**கால்நடை உற்பத்தி திறன் பெருக்குதல் கருத்தரங்கு**

ராஜபாளையத்தில் வியாழக்கிழமை ஒருங்கிணைந்த மண் வள மேம்பாடு மூலம் பசுந்தீவனம், கால்நடை உற்பத்தி திறன் பெருக்குதல் குறித்த கருத்தரங்கு நடைபெற்றது.

ராஜபாளையத்தில் உள்ள கால்நடை பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் மாநில திட்டக்குழுவின் நில பயன்பாடு மற்றும் ஆராய்ச்சி வாரியமும், இணைந்து நடத்திய கருத்தரங்கிற்கு மையத்தின் தலைவர் தனசீலன் தலைமை வகித்தார். உதவி பேராசிரியர் கே.நளினி பயிற்சியளித்தார். இதில், 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் வளமான மண்ணின் தன்மைகள், மண்வள குறைபாட்டினை ஆய்வு செய்து மேம்படுத்தும் உத்திகள், உயிர் உரங்கள் பயன்படுத்தும் முறை, ஒருங்கிணைந்த பண்ணையம், பயிர் சுழற்சி முறைகளை கையாளுதல், மண்வள மேலாண்மை அணுகுமுறை, பசுந்தீவனம் அளிக்கும் முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. கால்நடை மருத்துவர் சீனிவாசன் நன்றிகூறினார்.

**விருதுநகர் மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் பெற விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு**

விருதுநகர் மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை மூலம் வேளாண் இயந்திரம் மற்றும் வேளாண் கருவிகள் மானியத்தில் பெற விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இது தொடர்பாக ஆட்சியர் வே.ராஜாராமன் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம்: விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் வேளாண்மைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. வேளாண்மைத் துறையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பயிர் சாகுபடியை அதிகரிக்கும் வகையில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் சிறு, குறு விவசாயிகளுக்கு முழு மானியத்தில் அளிக்கப்படுகிறது.

தேசிய நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் வழங்கப்படுகிறது. தேசிய அபிவிருத்தி திட்டம் மூலம் வேளாண் கருவிகள் அரசு மானியத்தில் வழங்க சிறு,குறு விவசாயிகளுக்கு மானியத் தொகை ஒதுக்கப்பட்டு வழங்கப்பட இருக்கிறது. வேளாண்மை பொறியியல் துறை மூலம் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வாடகைக்கு வழங்கும் சேவை மையங்கள் சார்பில் சூரிய ஒளி மின்சாரத்தில் இயங்கும் பம்ப்செட் மோட்டார், சூரிய ஒளி கூடார உலர்த்திகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் மற்றும் உழவு இயந்திரங்கள், மண் தள்ளும் இயந்திரங்கள் குறைந்த வாடகையில் விவசாய பணிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் வேளாண் கருவிகளை மானியத்தில் வாங்க ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், வத்திராயிருப்பு, சிவகாசி, சாத்தூர், வெம்பக்கோட்டை பகுதி விவசாயிகள் ஸ்ரீவில்லிபுத்தூரில் இயங்கி வரும் உதவி வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் அலுவலகத்துக்கும், விருதுநகர் அருப்புக்கோட்டை, திருச்சுழி, நரிக்குடி, காரியாபட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் விருதுநகரில் செயல்பட்டு வரும்

வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்துக்கும் விண்ணப்பங்களை அனுப்பி பயனடையலாம்.

மேலும், விண்ணப்பத்துடன் புகைப்படம், விவசாய நிலத்தின் சிட்டா அடங்கல், குடும்ப அட்டை நகல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளாக இருந்தால் அதற்கான சான்றிதழ் நகல் இணைத்து மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும். அரசு விதிமுறைப்படி ஒதுக்கீடு முன்னுரிமை அடிப்படையில் பரிசீலித்து வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வேளாண்மை பொறியியல் துறை மூலம் மானியத்தில் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட திட்டங்களில் பயனடைய விரும்பும் விவசாயிகள் வேளாண்மை பொறியியல் துறையில் விண்ணப்பித்து பயனடையும் படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**புன்செய் புளியம்பட்டியில் சுண்டைக்காய் வற்றல் வரத்து அதிகரிப்பு**

புன்செய் புளியம்பட்டியில் சுண்டைக்காய் வற்றல் வரத்து அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். சத்தியமங்கலம், பவானிசாகர், புன்செய் புளியம்பட்டி வட்டாரத்தில் சுண்டைக்காய்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. மேலும் பவானிசாகர் வனப் பகுதியில் சேகரிக்கப்படும் சுண்டைக்காய்களும் புன்செய் புளியம்பட்டியில் விற்கப்படுகின்றன.

சுண்டைக்காய் சாகுபடி செய்யும் விவசாயிகள் அவற்றை உடைத்து, அதில் உள்ள விதைகளை நீக்கி, வெயிலில் உலரவைத்து வற்றலாக்கி விற்பனைக்கு கொண்டு வருவர். ஜூன் மற்றும் ஜூலை மாதம் சுண்டைக்காய் அறுவடைக் காலமாகும். இதையடுத்து, தற்போது, பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுண்டைக்காய் வற்றல் புன்செய் புளியம்பட்டிக்கு விற்பனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இவை, கிலோ ரூ. 70-வரை விற்பனை செய்யப்படுகின்றன.இவை, தூத்துக்குடி, திண்டுக்கல், மதுரை, சென்னை, சேலம் உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதுகுறித்து, வியாபாரி ஒருவர் கூறியது: சுண்டைக்காய் வற்றல் உணவாகவும், சித்த மருத்துவத்துக்கும் பயன்படுகிறது. ஒரு மூட்டை சுண்டைக்காய் வற்றல் எடை 37 கிலோ. ஜூலை மாதம் இறுதி வரை

இதன் விற்பனை இருக்கும். சாரசரியாக வாரம் 150 மூட்டைகள் விற்பனைக்கு வருகின்றன என்றார்.

**தருமபுரியில் ஜூலை 31-இல்விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தருமபுரியில் வரும் ஜூலை 31-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தருமபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 31-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற உள்ளது.

ஆட்சியர் கே.விவேகானந்தன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், வேளாண், தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் பங்கேற்கின்றனர். இந்தக் கூட்டத்தையொட்டி விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்துறை சார்பில் கருத்துக் கண்காட்சி வைக்கப்பட உள்ளது. எனவே, தருமபுரி மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களது குறைகளையும் கோரிக்கைகளையும் தெரிவித்துப் பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**போலி உரங்கள் விற்றால் கடும் நடவடிக்கை**

போலி உரங்கள் விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் என். சுப்பையன் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தென்னை வளர்ப்புக்கு சிறந்தது என்று கூறி போலி உரங்கள் வாகனங்களில் கொண்டு வரப்பட்டு நேரடியாக விற்பனை செய்யப்படுவதாக புகார்கள் வந்துள்ளன. இதுபோன்று உரங்கள் வேளாண் துறையினரால் எந்த விவசாயிகளுக்கும் நேரடியாக விநியோகம் செய்வது நடைமுறையில் இல்லை. வேளாண் துறையினரால் உரிமம் பெற்றவர்கள், நுண்ணூட்டக் கலவை உர உற்பத்தியாளர்கள், தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்துக் கடைகள் வழியாகவே விற்பனை செய்கின்றனர். வேளாண் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட நுண்ணூட்டக் கலவை ஜிப்சம், திரவ உயிர் உரங்கள் மற்றும் உயிர் உரப் பொட்டலங்கள் வட்டார வேளாண் உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில்

உள்ள வேளாண் விரிவாக்க மையத்தில் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, நடமாடும் வாகனத்தில் விற்பனை செய்யும் எந்த ஒரு நுண்ணூட்ட கலவை மற்றும் உயிர் உரங்களை விவசாயிகள் வாங்கி உபயோகப்படுத்த வேண்டாம். இதுபோன்ற போலி விற்பனையாளர்களை பற்றிய விவரங்கள் தெரிந்தால், விவசாயிகள் உடனடியாக அருகில் உள்ள வட்டார வேளாண் உதவி இயக்குநர்களிடம் தெரிவிக்க வேண்டும். போலி உரங்களை விற்பனை செய்வோர் மீது காவல்துறை மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**இந்த வாரத்தில் மேட்டூர் அணை திறக்கப்பட்டால் கூடுதலாக ஒரு லட்சம் ஏக்கர் குறுவைக்கு வாய்ப்பு**

ஓரிரு நாட்களில் மேட்டூர் அணை திறக்கப்பட்டால் கூடுதலாக ஒரு லட்சம் ஏக்கர் குறுவைக்கு வாய்ப்பு இருக்கும் என்பதால், விரைவில் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாகை மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

நாகை வி. சரபோஜி: சம்பா சாகுபடிக்கு உதவியாக விளைநிலங்களை அரசே உழவு செய்து தர வேண்டும். தட்டுபாடு இல்லாமல் விதை, உரங்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கீழ்வேளூர் வி.எஸ். சுப்ரமணியன்: மாவட்டத்தில் பல இடங்களில் தூர்வாரும் பணிகள் முடிவடைந்து விட்டதாகவும், இறுதி கட்டத்தை எட்டிவிட்டதாகவும் பொதுப்பணித் துறையினர் தெரிவிக்கின்றனர். ஆனால் எந்த ஆறு, எவ்வளவு தூரம் தூர்வாரப்பட்டது, எந்த பகுதி விவசாயிகளுக்கு அது பயனளிக்கும் என்ற விவரம் தெரியவில்லை. எனவே ஆறுகள், வாய்க்கால்கள் முறையாக தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மயிலாடுதுறை ராஜசேகரன்: விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று எலி ஒழிப்பு முகாம் நடத்தப்படும் என வேளாண் அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்த முகாமை ஆக. 15-க்குள் நடத்த வேண்டும்.

கரியாப்பட்டினம் கோ. சிவஞானம்: விவசாய வயல்களில் இணைப்புச் சாலைகள் அமைக்க வேண்டும். கீழ்வேளூர் தனபாலன்: குறுவைப் பயிர்களுக்கு தற்போது தண்ணீர் தேவைப்படும் பருவம் என்பதால் காலதாமதம் செய்யாமல் ஒரு சில தினங்களில் தண்ணீரை திறக்க வேண்டும். அவ்வாறு திறக்கப்பட்டால் கூடுதலாக ஒரு லட்சம் ஏக்கரில் குறுவை பயிரிட வாய்ப்பு உள்ளது. வெள்ளப்பள்ளம் ஏரியை தூர்வாரி நீரை சேமிக்க வேண்டும் என விவசாயிகள் கூறியிருந்தோம். அதன்படி அதிகாரிகள் தரப்பில் ஆய்வு செய்யப்பட்டு அங்கு தண்ணீரை சேமித்தால் உப்பு தண்ணீராக இருக்கும் என கூறப்பட்டிருந்தது. தற்போது அந்த இடங்களில் 3 பண்ணைக் குட்டைகள் வெட்டப்பட்டுள்ளன. அதில் நல்ல தண்ணீரே கிடைக்கிறது. எனவே வெள்ளப்பள்ளம் ஏரியை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மண் வளம் காப்பது குறித்து மாணவர்களுக்கு பயிற்சி**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மண் வளம் காப்பது குறித்த பயிற்சி வகுப்பு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மண், வேதியியல் துறை மற்றும் வேப்பந்தட்டை பருத்தி ஆராச்சி நிலையம் சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த பயிற்சி வகுப்பை, பள்ளி தலைமை ஆசிரியர் சுகுமாறன் தொடக்கி வைத்தார்.

மண்ணியல் துறை பேராசிரியர் வடிவேல் பேசியது: மண் பயிர்களுக்கு ஆதாரமாக இருந்து ஊட்டமளித்து, குப்பைகள் மற்றும் கழிவுகளை மட்கச் செய்கிறது.

நீரிலிருந்து மாசுகளை அகற்றி வடிகட்டுகிறது. கட்டடங்கள் மற்றும் கட்டுமானத்துக்கு பயன்படுகிறது என்றார். தொடர்ந்து, மண்ணியல் துறை உதவி பேராசிரியர்கள் லதா, கோபாலகிருஷ்ணன் ஆகியோர் செம்மண், கரிசல் மண், வண்டல் மண், மணற்பாங்கான மண், களிமண், குறுமண், சுண்ணாம்பு பாங்கான மண் ஆகிய மண் மாதிரிகளுடன், நயம் மற்றும் வழ வழப்பு, பிசுபிசுப்பு தன்மைகள் குறித்து பேசினர். இதில்,

பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர் கவிமணி, உதவி தலைமை ஆசிரியர் ராஜேந்திரன் உள்பட 8-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரை பயிலும் சுமார் 200-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். வேதியியல் ஆசிரியர் சேகர் நன்றி கூறினார்.

**மீன்பிடித் தடை கால உதவித்தொகையாக ரூ. 2.81 கோடி அளிப்பு**

மீன்பிடித் தடை கால உதவியாக திருநெல்வேலி மாவட்டத்தில் 9,179 மீனவர்களுக்கு ரூ. 2.81 கோடி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் மு. கருணாகரன் தெரிவித்தார். திருநெல்வேலி மாவட்ட அளவிலான மீனவர்கள் குறைதீர் கூட்டம் ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு தலைமை வகித்து, ஆட்சியர் மு. கருணாகரன் பேசியதாவது: மீனவர்களின் நலனை மேம்படுத்தும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூடன்குளம் அணுமின் நிலைய சுற்று வட்டார கிராமங்களில் முதல் கட்டமாக ரூ. 300 கோடியில் பல்வேறு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீனவ கிராமங்களில் 10 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு 5 ஆயிரம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் மீன்பிடித் தடை காலத்தில் 9,179 மீனவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 4,924 மீனவர்களுக்கு தலா ரூ. 4 ஆயிரம் வீதம் ரூ. 1.96 கோடியும், 4,255 மீனவர்களுக்கு தலா ரூ. 2 ஆயிரம் வீதம் ரூ. 85 லட்சமும், ஆக மொத்தம் ரூ. 2.81 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. தேசிய மீனவர் சேமிப்பு நல நிதியிலிருந்து 4,656 மீனவக் குடும்பங்களுக்கு ரூ. 71லட்சமும், பெண்கள் சேமிப்பு நிதியிலிருந்து 2,909 மீனவக் குடும்பங்களுக்கு ரூ. 78 லட்சமும் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன. கடலோரக் கிராமமான கூட்டப்புளி கிராமத்தில், தூண்டில் வளைவு அமைக்கும் வகையில் ரூ. 28 கோடியில் திட்ட வரைவு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

கூட்டத்தில், முதல்வரின் சிறப்புத் திட்டத்தின் கீழ், தூண்டில், செவுள் வலை மீன்பிடி விசைப்படகு கட்டுவதற்கு 50 சதவீதம் மானியத்தில் மீனவர்கள் இருவருக்கு ரூ. 30 லட்சம் வழங்கப்பட்டது. எஸ். மைக்கேல்ராயப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சித் தலைவர் பா. நாராயணபெருமாள், மாவட்ட வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ. விஜயகுமார், சேரன்மகாதேவி சார்-ஆட்சியர் வி. விஷ்ணு, மீன்வளத் துறை இணை இயக்குநர் அமல்சேவியர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கடல் அரிப்பைத் தடுக்க ரூ.10 கோடியில் தடுப்புச் சுவர்**

தமிழகத்தில் கிழக்கு கடற்கரையின் நீளம் 1076 கி.மீ. தொலைவாக உள்ளது. இதில், 13 கடற்கரை மாவட்டங்களும், 591 மீனவ கிராமங்களும் உள்ளன. மீன்பிடித் தொழிலில் இந்தியாவிலேயே 4ஆவது இடத்தில் தமிழகம் உள்ளது.

இத் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் தமிழக அரசின் மீன்வளத் துறை மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த வகையில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் அருகேயுள்ள பெருமணல் கிராமத்தில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டவும் முடிவு செய்யப்பட்டது. கூடங்குளம் அணுமின்நிலைய உதவியைப் பெற்று சுற்று வட்டாரக் கிராமங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.10 கோடி மதிப்பில் இந்த தடுப்புச் சுவர் கட்டும் பணி நடைபெறுகிறது.இந்தப் பணிகளின் தொடக்க விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அருள்தந்தை கிஷோக் ஜெபம் செய்து பணிகளைத் தொடங்க ஆசீர்வதித்தார்.

இதையடுத்து ஆட்சியர் மு.கருணாகரன், தடுப்பு கற்களை கரையில் எடுத்து வைத்து கட்டுமானப் பணியை தொடங்கி வைத்தார். இந்த தடுப்புச் சுவரானது வடமேற்கு கடல் அரிப்பு தடுப்புச் சுவராக 200 மீ நீளத்துக்கும், வடகிழக்கு தடல் அரிப்பு தடுப்புச் சுவராக 205 மீட்டர் நீளத்துக்கும் கட்டப்படுகிறது.

**தொடர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

திருக்கோவிலூர் பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திருக்கோவிலூர், கண்டாச்சிபுரம், ரிஷிவந்தியம், மூங்கில்துறைப்பட்டு, சங்கராபுரம் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் கடந்த இரு தினங்களாக பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் கடும் வறட்சியால் விவசாயம் பாதிப்பு, குடிநீர்த் தட்டுப்பாடு இருந்து வரும் நிலையில், இந்த மழை மகிழ்ச்சி அளிப்பதாக விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கேரளாவால் பாடம் கற்ற வேளாண் துறை: உயிர் உரங்கள் விற்பனைக்கு மானியம்**

காய்கறிகளில் நச்சுத்தன்மை இருப்பதாக, கேரளா பிரச்னை எழுப்பியுள்ள நிலையில், உயிர் உரங்களை மானியத்தில் வழங்கி, அதன் விற்பனையை அதிகரிக்க, வேளாண் துறை திட்டமிட்டு உள்ளது.செயற்கை உரங்களை பயன்படுத்துவதால், உணவு தானியங்கள் மற்றும் காய்கறிகளில், ரசாயன தன்மை இருப்பதாக புகார் எழுந்துள்ளது. ஆனால், தமிழகத்தில் உற்பத்தியாகும் பொருட்களில், அனுமதிக்கப்பட்ட அளவிலேயே ரசாயன தன்மை உள்ளது.தமிழக காய்கறிகளில் நச்சுத் தன்மை இருப்பதாக, கேரளா பிரச்னை செய்து வருகிறது. தேசிய ஆய்வகங்களில் ஆய்வுக்கு உட்படுத்தப்படும்
காய்கறிகளை மட்டுமே, அனுமதிக்க போவதாகவும் அறிவித்துள்ளது.இந்நிலையில் தமிழகத்தில், செயற்கை உரங்களுக்கு பதில், உயிர் உரங்கள் பயன்பாட்டை அதிகரிக்க, வேளாண் துறை முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:உயிர் உரங்களில் திடம், திரவம் என, இரண்டு வகை உள்ளது. இவற்றை உற்பத்தி செய்ய, வேளாண் துறை மூலம், பல மாவட்டங்களில் மையங்கள் உள்ளன.

* நெல்லுக்கு தனியாகவும்; சிறுதானியங்கள், எண்ணெய் வித்துகள் உள்ளிட்ட பயிர்களுக்கு தனியாகவும், 'அசோஸ்பைரில்லம்' என்ற உயிர் உரம். நிலக்கடலைக்கு தனியாகவும்; மற்ற பயிர்களுக்கு தனியாகவும், 'ரைசோபியம்' என்ற உயிர் உரம்.

* எல்லா பயிர்களுக்கும் பயன்படும், 'பாஸ்போ பாக்டீரியா' என்ற உயிர் உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றை பயன்படுத்துவதால், உணவு பொருட்களின் இயற்கை தன்மை பாதிக்காது.தற்போதைய சூழ்நிலை கருதி, உயிர் உரங்களின் விற்பனையை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இவற்றை வாங்கும் விவசாயிகளுக்கு மானியமும் அறிவிக்கப்பட்டு உள்ளது.ஒரு ஹெக்டேர் அதாவது, 2.4 ஏக்கருக்கு உயிர் உரம் வாங்கினால், 150 ரூபாய் மானியம் வழங்கப்படும். திரவ உயிர் உரங்கள், 325 ரூபாய் வரை விற்கப்படுகிறது.பாக்கெட் வடிவிலான திட உயிர் உரங்கள், 200 கிராம், ஆறு ரூபாய்க்கு மட்டுமே விற்கப்படுகின்றன. இந்த உயிர் உரங்களை தனியாக மட்டுமின்றி, விதைகளிலும் கலந்து பயன்படுத்த, விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார். -- நமது நிருபர்- -

**மழைக்கால கூட்டத்தொடர்இரு நாட்கள் நீட்டிப்பு**

பெங்களூரு: கர்நாடகா சட்டசபை மழைக்கால கூட்டத்தொடர், மேலும் இரு நாட்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது. வரும் 30, 31ம் தேதிகளில், சட்டசபை, மேலவை கூட்டங்கள் நடக்கவுள்ளன.சபாநாயகர் திம்மப்பா தலைமையில், நேற்று காலை, சட்டசபை ஆலோசனை கமிட்டி கூட்டம் நடந்தது. இதில், முதல்வர் சித்தராமையா, மேலவை தலைவர் சங்கரமூர்த்தி, எதிர்க்கட்சி தலைவர் ஜெகதீஷ் ஷெட்டர், அமைச்சர்கள் ஜெயசந்திரா, எஸ்.ஆர்.பாட்டீல் பங்கேற்றனர்.கூட்டத்தில், மழைக்கால கூட்டத்தொடரை மேலும் இரு நாட்கள் நீட்டிக்க

தீர்மானிக்கப்பட்டுள்ளது.நிருபர்களிடம் முதல்வர் சித்தராமையா கூறியதாவது: சட்டசபை மழைக்கால கூட்டத்தொடர், இன்னும் இரு நாட்கள் நீட்டிக்க, கமிட்டி தீர்மானித்துள்ளது. கர்நாடகா லோக் ஆயுக்தா திருத்த மசோதா - -2015 தொடர்பாக, இரு நாட்கள் நடக்கும் கூட்டத்தொடரில் விவாதிக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

## காய்கறிகளுக்கு தரச்சான்று தருவது யார்?வியாபாரிகள், விவசாயிகள் குழப்பம்

ஊட்டி: 'காய்கறிகளுக்கு தரச்சான்று தருவது யார்' என்பது தெரியாமல், ஊட்டி காய்கறி வியாபாரிகளும், விவசாயிகளும் குழப்பமடைந்து உள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் விளைவிக்கப்படும் உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட் போன்ற மலைக் காய்கறிகள், புருக்கோலி, சலாட், செல்லரி போன்ற சீன காய்கறிகள், கேரளாவுக்கு அனுப்பப்படுகின்றன.கோழிக்கோடு வழியாக மட்டும், தினமும், 25 டன் காய்கறிகள் கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதுதவிர, மேட்டுப்பாளையம் மார்க்கெட் வழியாகவும், ஊட்டி காய்கறி கள், கேரளா கொண்டு செல்லப்படுகின்றன.இந்நிலையில், 'தமிழக காய்கறிகளில், ரசாயன உர பயன்பாடு அதிகமுள்ளது' எனக் கூறி, தரச்சான்றிதழை கேரள அரசு கேட்டு வருவது, விவசாயிகள், வியாபாரிகள்மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.ஊட்டி நகராட்சி அனைத்து வியாபாரிகள் சங்க பொருளாளர், ராஜா முகமது கூறியதாவது: கேரள அரசு கேட்கும் சான்றிதழை, எங்கிருந்து வாங்க வேண்டும்; அதற்குரிய நிபந்தனைகள் என்ன; அதற்கு பொறுப்பு அதிகாரி யார் என்பன உட்பட, எந்த விளக்கங்களும் இல்லை. இதனால், குழப்பமான சூழ்நிலை விவசாயிகள், வியாபாரிகளிடம் ஏற்பட்டு உள்ளது. இந்த விவகாரத்தில், மாநில அரசு தலையிட்டு ஒரு தெளிவை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

**வைகை அணை குறையாத நீர் மட்டம்**

ஆண்டிபட்டி: முல்லை பெரியாற்றில் இருந்து நீர் வரத்து உள்ளதால், வைகை அணை நீர் மட்டம் சீரான நிலையில் உள்ளது.மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் முதல் போக பாசனத்திற்காக ஜூலை 15ல் வைகை அணையில் தண்ணீர் திறக்கப்பட்டது. தொடர்ந்து வினாடிக்கு 900 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பெரியாறு அணை நீர் பிடிப்பு பகுதியில் தொடரும் மழையால் நீர் வரத்து கணிசமாக உள்ளது. பெரியாறு அணையில் இருந்து வைகை அணைக்கான நீர் வரத்தும் தொடர்கிறது. பெரியாறு அணை நீர் வரத்து, வைகை அணையில் பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவை சமன் செய்து வருகிறது.நேற்று வைகை அணைக்கான நீர் வரத்து வினாடிக்கு 1149 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து பாசனம் மற்றும் குடிநீருக்காக வினாடிக்கு 960 கன அடிநீர் வெளியேறுகிறது. ஜூலை 16ல் நீர் மட்டம் 51.61 அடியாகவும், ஜூலை 18ல் 51.57 அடியாகவும், ஜூலை 20ல் 51.61 அடியாகவும், ஜூலை 22ல் 51.64 அடியாகவும், நேற்று காலை நீர் மட்டம் 51.84 அடியாகவும் இருந்தது. அணை மொத்த நீர் மட்ட உயரம் 71 அடி. வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு தொடர்ந்தாலும் கடந்த 10 நாட்களாக நீர் மட்டம் சமன் செய்யப்பட்டு வருகிறது.

**டெல்டா குறுவை தொகுப்பு திட்டத்தில் குளறுபடி : ஆய்வு செய்ய அதிகாரிகளுக்கு அழைப்பு**



'டெல்டா மாவட்ட குறுவை தொகுப்புதிட்டத்தில், பல குளறுபடிகள் உள்ளன. இதுகுறித்து, வேளாண் துறை உயர் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். டெல்டா மாவட்டங்களின் குறுவை சாகுபடிக்காக, 41 கோடி ரூபாய் திட்டத்தை, ஜூன், 4ல், முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்; 2.50 லட்சம் ஏக்கரில், குறுவை சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.ஆர்.கே., நகர் இடைத்தேர்தலால், இந்தத் திட்டம் தாமதமானது. இந்த மாத துவக்கத்தில் இருந்து தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. ஆனால், குறுவை தொகுப்பு திட்ட பலன்கள், விவசாயிகளை முறையாக சென்று சேரவில்லை என, புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து, மாவட்ட வேளாண் துறை அதிகாரி கள், கலெக்டர் அலுவலக குறை தீர்ப்பு கூட்டங்களில் முறையிட்டும் பலன் இல்லை. எனவே, இதுகுறித்து வேளாண் துறை உயர் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். **தமிழக விவசாயிகள் சங்க, தஞ்சை மாவட்ட தலைவர் கக்கரை சுகுமாறன் கூறியதாவது:**

குறுவை சாகுபடி செய்யாத விவசாயிகளுக்கும், திட்ட பலன்கள் கிடைத்துள்ளன. உயர் அதிகாரிகள் ஆய்வுக்கு வந்தால், அவர்களிடம், ஆதாரபூர்வமாக தகவல்களைதெரிவிப்போம். இலவச இயந்திர நடவுப்பணிகளை, வேளாண் துறை மூலம் பல விவசாயிகள் செய்யவில்லை; சொந்த செலவில் செய்துள்ளனர். இதற்காக, ஒதுக்கப்பட்ட நிதி என்னவானது என, தெரியவில்லை. சென்னையில் உள்ள உயர் அதிகாரிகள் அடிக்கடி ஆய்வுக்கு வர வேண்டும்; அப்போது தான் குளறுபடிகளை கண்டறிய முடியும்.இவ்வாறு அவர் கூறினார்.

### திட்டப்பலன்கள்:

* இலவச நடவுப்பணி, 25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.
* நெல் நுண்ணூட்ட கலவை மற்றும் உயிர் உரங்கள் வாங்க, ஏக்கருக்கு, 315 ரூபாய் வழங்கப்படும்.
* 50 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் மேம்பாட்டிற்காக, மூன்று கோடி ரூபாய்

செலவில், 'ஜிப்சம்' வழங்கப்படும்.

* குறுகிய கால பயறு வகைகள் மற்றும் பசுந்தாள் உர பயிர்கள் சாகுபடிக்கான விதைகள், 5.10 கோடி ரூபாய் செலவில், இலவசமாக வழங்கப்படும்.

**மாட்டினம் காக்க புதியதோர் மாணவர் படை!**



பழந்தமிழர்களின் பாரம்பரிய விலங்கு மாடு. விவசாயத்தில் துவங்கி, தற்போது தினம் தினம் அருந்தும் பால், டீ முதல் அனைத்தும் மாடுகளிலிருந்து பெறும் பொருட்கள்தான். மாடுகளிடமிருந்து அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொண்டு அவற்றை காக்கவும், வளர்க்கவும், நாம் முன்வருவதில்லை. இவற்றை பார்த்து கொந்தளித்த, கோவை அமைப்புகள் மாட்டினத்தை காக்க பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகின்றன. அளவுக்கு அதிகமாக மாடுகளை ஏற்றிச்செல்லும் வாகனங்களை பறிமுதல் செய்தல்; நோயால் அவதிப்படும் மாடுகளை மீட்டு கோசாலைகளில் ஒப்படைத்தல், உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு மேலும் வலுவூட்டும் விதமாக, கோவை மாணவர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். கோவை, 'கேட்டில் கேர்' அமைப்பில், மாணவர் படை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மாணவர் படை சார்பில், மாட்டினத்தை காக்க பல்வேறு திட்டங்கள் வகுத்துள்ளனர்.

முதல் கட்டமாக, நாளை காலை இந்துஸ்தான் கலை அறிவியல்

கல்லூரியில், விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துகின்றனர்.

**அவர்களின், குறிக்கோள் மற்றும், ஆர்வத்துக்கான காரணம் குறித்து, மாணவர் அணி ஒருங்கிணைப்பாளர் துளசிமணி கூறியதாவது:**இன்றைய நகர வாழ்வியலில், மாடுகளின் நேரடியான பயன்பாட்டை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், விவசாயிகளுக்கு ஏற்படும் நெருக்கடி காரணமாக அவர்கள், மாடுகளை இறைச்சிக்காகவும், மற்றும் பல்வேறு காரணங்களுக்காகவும் விற்கின்றனர். உயிர் என்று கருதும்போது அனைத்தும் சமமானவை. ஆனால், மற்ற உயிரினங்களைவிட, மாடுகள் அதிகளவிலான சித்ரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றன. மாடுகளை பாதுகாக்க வேண்டியது, ஒவ்வொரு மனிதனின் கடமை.மாட்டிறைச்சிக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. அதே சமயம், மாடுகளை சித்ரவதை செய்து, வாகனத்தில் ஏற்றுவதை, நாங்கள் அனுமதிக்கமாட்டோம். ஒரு லாரியில், ஆறு மாடுகளை ஏற்றிச்செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால், சட்டத்துக்கு புறம்பாக, 15 முதல், 25 மாடுகளை ஏற்றிச் செல்கின்றனர். அதிகளவிலான மாடுகளை ஏற்றிச்செல்வதற்காக, அவர்கள் செய்யும் சித்ரவதைக்கு அளவே இல்லை. மாடுகளின் கால்களில் கீறுதல், கண்களில் மிளகாய்போடி துாவுதல் உள்ளிட்ட உச்சக்கட்ட சித்ரவதைகள் செய்கின்றனர். இதை தவிர, மாடுகளை வாகனத்தில் ஏற்றுவதுக்கு முன், மூன்று நாட்களுக்கு உணவும் தண்ணீரும் வழங்கப்படுவதில்லை.இத்தகைய நிலையை மாற்றி மாட்டினத்தை காக்க வேண்டும் என, விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துகிறோம். இதற்காக, கோவை, சேலம், திண்டுக்கல், ஈரோடு, உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து, 3000க்கும் மேற்பட்ட மாணவர்கள் வருகின்றனர். அதேபோல், கோவை மாவட்டத்தில் உள்ள பல்வேறு கல்லுாரிகளிலிருந்து, 7000க்கும் மேற்பட்ட மாணவர்கள் வருகிறார்கள். புதியதோர், விளைவுக்காக மாணவர்கள் ஒன்றிணைகிறோம். இதில், சிறப்பு விருந்தினராக நடிகர் விஷால் கலந்துகொள்கிறார்.இவ்வாறு, அவர் கூறினார்.

'இயற்கையை கெடுப்பது மனிதனின் பேராசை': கூறுகிறார் 'ஜீரோ பட்ஜெட்' விவசாயி







பொள்ளாச்சி பகுதியில், இன்றைய தேதியில் ரசாயனமே விழாத விளைநிலமொன்று உள்ளது என்றால், நம்புவது சற்று கடினம் தான். ஆனால், மூன்று தலைமுறைகளாக, எவ்வித ரசாயன உரங்களையோ, பூச்சிக்கொல்லிகளையோ பயன்படுத்தாமல், இயற்கையும், நவீனமும் கைகோர்க்கும் விவசாயம் நடந்து வருகிறது.

பொள்ளாச்சி வால்பாறை ரோடு வஞ்சியாபுரம் பிரிவிலிருந்து, கிழக்குத்திசையில் நாட்டுக்கல்பாளையம் ரோடு செல்கிறது. அதனருகே, சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சி எல்லைக்குட்பட்டு, 'இன்ஜினியர் தோட்டம்' உள்ளது.இங்கு மொத்தம் உள்ள, 12 ஏக்கரில், குடியிருப்பு, கட்டடங்கள் போக, 10 ஏக்கரில் விவசாயம் நடந்து வருகிறது. அதில், 650 தென்னை மரங்களும், அதனிடையே ஊடுபயிராக 'ஜி9' ரக வாழையும் பயிரிடப்பட்டுள்ளது. அந்த தோப்பின் உரிமையாளர் சேகர். இயற்கை விவசாயத்தில் மிகுந்த ஈடுபாடும், நம்பிக்கையும் உள்ளவர்.

இவர், தன் தோப்பிற்கு எவ்வித ரசாயன உரங்களையும் பயன்படுத்துவதில்லை. இவர் மட்டுமல்ல; இவரது தந்தை முருகேசன், பொதுப்பணித்துறையில் பொறியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.அவரது தந்தை சுப்பேகவுண்டர், தீவிர விவசாயி. இவர்கள் யாருமே ரசாயன உரங்களை பயன்படுத்தியதில்லை என்பது வியப்பான விஷயம். அரசு 'பசுமைப்புரட்சி' திட்டத்தின் கீழ், விளைச்சலை பெருக்கும் முனைப்பில், நாடு முழுக்க ரசாயன உரங்களையும், பூச்சிக்கொல்லி

மருந்துகளையும் தீவிரமாக விவசாயிகளிடம் கொண்டு சேர்த்த போதும், அவர்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை. அதற்கு மாற்றாக காலம் காலமாக நடந்த பாரம்பரிய முறைகளை பின்பற்றியே விவசாயம் செய்தனர். தற்போது சேகர் காலத்தில், இயற்கை முறைகளோடு, நவீன உத்திகளை புகுத்தி, செழுமைப்படுத்தியுள்ளார்.

### 'ஜீரோ பட்ஜெட்' விவசாயம்:

விளைநிலத்திற்கு வெளியே இருந்து, எந்த ஒரு பொருளையும் பணம் கொடுத்து வாங்கி வந்து பயன்படுத்தாமல் விவசாயம் செய்வதே 'ஜீரோ பட்ஜெட்' விவசாயம் எனப்படுகிறது. சேகர் அந்த முறையை தான் பின்பற்றி வருகிறார். இதனால், அவருக்கு இடுபொருட்களுக்கான செலவு என்பது அறவே தவிர்க்கப்படுகிறது. ஆள் கூலி போக, விளையும் அனைத்தும் லாபம் தான்.

### நிலம் முழுக்க உரத்தொழிற்சாலை:

தோப்பில், ஒவ்வொரு நான்கு தென்னைகளுக்கும் மத்தியில், அம்மரங்களில் இருந்து விழும் காய்ந்த மட்டை, பாளை, ஓலை உள்ளிட்ட கழிவுகள் தொடர்ந்து கொட்டி வரப்படுகின்றன. அதன் மேல், 'ஸ்பிரிங்க்ளர்' முறையில் தெளிப்பு பாசனம் அமைத்துள்ளார். அதில் கழிவுகள் தொடர்ந்து நனைந்து, மக்கி, சத்தான உரமாக மாறிவிடுகிறது. இரண்டு ஆண்டுகளாக இந்த முறையை பின்பற்றி வருவதால், தோப்பு முழுக்க ஆங்காங்கே உரம் தயாரிக்கப்பட்டு விடுகிறது.

**பண்ணைக்குட்டை:**

நிலத்தின் கிழக்கு பகுதியில் ஏறத்தாழ, 30 சென்ட் பரப்பளவில் பண்ணைக்குட்டை அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசு மானியம் பெற, தென்னைகளை வெட்டிவிட்டு, குறிப்பிட்ட அமைப்பில் குட்டை அமைக்க வேண்டும் என்பதால், தென்னைகளுக்கு பாதிப்பின்றி, முழுக்க தன் செலவிலேயே வித்தியாசமான முறையில் அமைத்துள்ளார். சரிவான

இக்குட்டையில், ஓடிவரும் மழைநீர் சேகரமாகி, நிலத்தடி நீர் ஆதாரத்தை அதிகரித்து வருகிறது.

### பாத்தி இல்லை:

பொதுவாக தென்னை மரங்களுக்கு பாத்தி அமைத்து பாசனம் செய்வது தான் வழக்கம். ஆனால் இவரது தோப்பில், எங்குமே பாத்திகளை காண முடிவதில்லை. முழுக்க முழுக்க 'ஸ்பிரிங்க்ளர்' பாசனம் தான். இதனால் தோப்பு முழுக்க 'சில்' என குளிர்ச்சியான சீதோஷ்ணம் நிலவுவதுடன், தண்ணீரும் வீணாவது இல்லை.

### உழவே கிடையாது:

சேகரின் நிலத்தில் பல ஆண்டுகளாக உழவு செய்யப்படவேயில்லை. இயற்கை வேளாண்மை என்பதால், மண்ணை சற்றே தோண்டியதும், கை நிறைய மண் புழு கிடைக்கிறது. இது போல நிலம் முழுக்க நிறைந்து கிடைக்கும் மண் புழுக்கள், மண்ணை குடைந்து உழவுப்பணியை செய்துவிடுவதுடன், அவற்றின் கழிவுகள் சத்தான உரமாகவும் மாறி மண்ணை வளப்படுத்தி விடுகிறது.

**விவசாயி சேகர் கூறியதாவது**நிறைய விளைச்சல் கிடைக்க வேண்டும் என்று, கண்ட ரசாயனங்களையும் விளைநிலத்தில் கொட்டுவது, போதை மருந்தை உட்கொண்டு, விளையாட்டு போட்டியில் பங்கேற்பதை போலத்தான். அதில் வெற்றி கிடைக்காது; கிடைத்தாலும் நிலைக்காது.மனிதர்களின் பேராசை தான் அதையெல்லாம் செய்யத்தூண்டுகிறது. இதனால் இயற்கை சீர்கெட்டு, மனிதன் அழிவை சந்திக்கிறான். என் தாத்தாவும், தந்தையும் எனக்கு உயிரோட்டமுள்ள மண்ணை கொடுத்துள்ளனர். என் வாரிசுகளுக்கும் அதை அப்படி அளிக்கவே விரும்புகிறேன். மேலும், ரசாயன விவசாயத்தில் நடக்கும் உற்பத்திக்கு கொஞ்சமும் குறையாமல் இயற்கை முறையிலும் கிடைக்கிறது. ஆனால் இயற்கை முறையில் செலவு இல்லை என்பதால், இதில் தான் லாபம் அதிகம் கிடைக்கிறது. மரத்தின் கழிவுகளை உரமாக்குவதுடன், ஜீவாமிர்தம் மற்றும் மூலிகை பூச்சி விரட்டி

ஆகியவற்றை நானே தயாரித்து பயன்படுத்துகிறேன். அதுவும் நன்கு பலனளிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

ரசாயனத்தை கொட்டி, தன் மண்ணையும் கெடுக்காமல், அதில் விளையும் பொருட்களை உண்ணும் மக்களின் ஆரோக்கியத்தையும் கெடுக்காமல், நல்ல லாபமும் ஈட்ட முடியும் என மூன்றாம் தலைமைமுறையாக நிரூபித்து வரும் பொள்ளாச்சி விவசாயி சேகர் நிச்சயம் சாதனை விவசாயி தான். அவரது வெற்றி, இன்னும் பல இயற்கை விவசாயிகளை உருவாக்கும் என்பது நிச்சயம்.

**ஜீவாமிர்தம் தயாரிக்கும் 'டிப்ஸ்':**

20 கிலோ மாட்டுச்சாணம், 20 லிட்டர் மாட்டு சிறுநீர், 2 கிலோ கொள்ளு மாவு, 2 கிலோ கரும்பு சர்க்கரை மற்றும் ஒரு கைப்பிடி விளைநிலத்தின் மண்ணை, பீப்பாயில் கொட்டி, நன்கு கலந்து, இரண்டு நாட்கள் ஊறல் போட வேண்டும். அதில் உருவாகம் கலவை தான் ஜீவாமிர்தம். அதை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, பயிர்களின் வேரில் ஊற்றலாம்; இலைவழித்தெளிப்பாகவும் பயன் படுத்தலாம்.

**மூலிகை பூச்சி விரட்டி:**

வேப்பிலை 5 கிலோ, ஆடுதொடா இலை 5 கிலோ, நொச்சி இலை 5 கிலோ, ஊமத்தை இலை 5 கிலோ, எருக்கன் இலை 5 கிலோ ஆகியவற்றை உரலில் இட்டு நன்கு இடித்து, மாட்டு சிறுநீரில் 15 நாட்கள் ஊற வைக்க வேண்டும்.அதில் உருவாகும் கரைசல் தான் சக்தி வாய்ந்த மூலிகை பூச்சி விரட்டி. அதை, 10 லிட்டர் தண்ணீருக்கு, 1 லிட்டர் என்ற விகிதத்தில் கலந்து தெளித்தால், பயிர்களை தாக்கும் பூச்சிகள் நன்கு கட்டுப்படும்.

# பட்டிவீரன்பட்டி பகுதியில் 5 அடி உயரத்திலேயே பலன் தரும் உயர்ரக பலா மரக்கன்றுகள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்



பட்டிவீரன்பட்டி பகுதியில் 5 அடி உயரத்திலேயே பலன் தரும் பலா மரக்கன்றுகளை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

<u>பலா மரங்கள்</u>

மலைப்பகுதியில் வளரும் மரங்களில் தித்திக்கும் சுவை கொண்ட பலா பழங்களை தருவது பலா மரங்கள் ஆகும். இந்த மரங்கள் சுமார் 50 அடி உயரம் வரை வளரும் தன்மை கொண்டது. இதில் ஏராளமான கிளைகள் இருக்கும். இந்த கிளைகளில் மரத்தின் தன்மைக்கு ஏற்ப ஏராளமான பலா பழங்கள் காய்க்கின்றன.

ஒவ்வொரு பலா பழமும் சுமார் 40 கிலோ எடை கொண்டதாக இருக்கும். பலா மரங்கள் மிகவும் உயரமாக இருப்பதால் அவற்றில் ஏறி பழங்களை பறிப்பது விவசாயிகளுக்கு சற்று சிரமமான காரியமே.

<u>5 அடி உயரத்தில்....</u>

இதனால் மரத்தில் மேல்புறத்தில் உள்ள பழங்களை விவசாயிகள் பறிக்காமலேயே விட்டுவிடும் நிலை உள்ளது. அந்த பழங்களும் ஒரு

கட்டத்தில் மரத்தில் இருந்து பழுத்து கீழே விழுந்து சிதறுகின்றன. இதனால் அவை விவசாயிகளுக்கு பயன்படாமலேயே போகும் நிலை உள்ளது.

இதனை போக்கும் விதமாகவும், வீட்டு தோட்டத்தில் வளர்க்கும் விதமாகவும் தற்போது பாலூர் எனும் 5 அடி உயரமே வளரும் உயர்ரக பலா மரக்கன்றுகள் உள்ளன. இந்த மரங்கள் தற்போது பட்டிவீரன்பட்டி அருகே உள்ள சாலைபுதூர் பகுதிகளில் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. இதை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

3 வருடத்தில் பலன் தரும்

இது குறித்து அப்பகுதி விவசாயி ஒருவர் கூறும்போது, ‘மலைப்பகுதிகளில் மட்டுமே வளரும் பலா மரங்களை தற்போது நம் வீட்டு தோட்டத்திலேயே வளர்க்கலாம். இதற்கு குறுகிய காலத்தில் பலன் தரும் பாலூர் வகை மரக்கன்றுகள் உதவுகின்றன. இது உயர்ரக மர வகையை சேர்ந்தது என்பதால் இதன் சுவை மற்ற பழங்களைவிட அதிகமாக இருக்கும்.

இந்த வகையான பலா மரங்கன்றுகள் நடப்பட்ட 3–வது வருடத்தில் இருந்து பலன் அளிக்கக்கூடியதாகும். மாட்டு சாணம், மண்புழு உரம் உள்ளிட்ட இயற்கை உரங்களே இந்த மரங்களை வளர்ப்பதற்கு போதுமானதாகும். இந்த மரங்களில் குறைந்தபட்சம் 20 முதல் 30 பலா பழங்கள் வரை காய்க்கும்’ என்றார்.

**சிறுதானியங்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இலவசமாக உழவு செய்து கொடுக்க வேண்டும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வலியுறுத்தல்**



புதுக்கோட்டை,

சிறுதானியங்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இலவசமாக உழவு செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதுக்கோட்டையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.அம்மா உணவகத்தில்தேங்காய் சாதம்

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் புதுக்கோட்டை கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் கணேஷ் தலைமை தாங்கி பேசினார். மாவட்ட வருவாய் அதிகாரி மாரிமுத்து முன்னிலை வகித்தார். கூட்டத்தில் விவசாயி கோபாலகிருஷ்ணன் பேசுகையில், தேங்காய் விலை தற்போது குறைந்து உள்ளது. மேலும் அம்மா உணவ கங்களில் தயிர்சாதம், சாம்பார்சாதம் வழங்குவதுபோல தேங்காய் சாதமும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். விவசாயிகளுக்கு இலவசமாக உழவு... விவசாயி தனபதி கூறும்போது, மாவட்டத்தில் குறைந்த அளவு பெய்த

மழையை விவசாயிகளால் பயன்படுத்த முடியாது. விவசாய நிலத்தை உழவு செய்ய டிராக்டர்கள் மணிக்கு ரூ.800 வரை வாங்குகின்றனர். எனவே சிறுதானியங்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மட்டும் இலவசமாக உழவு செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குளங்களையும், வரத்துவாரிகளையும் தூர்வாரி, பழுதாகி உள்ள மதகுகளையும் ஒரு சிறப்பு திட்டத்தின்கீழ் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். பஸ் வசதி

விவசாயி ராமசாமி பேசியதாவது, புதுக்கோட்டை புதிய பஸ் நிலையத்தில் இருந்து கலெக்டர் அலுவலகத்திற்கு பஸ் வசதி செய்யப்பட்டு உள்ளது. இதற்காக விவசாயிகள் சார்பில் கலெக்டருக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். மேலும் கலெக்டர் அலுவலகத்திற்கு வரும் பஸ் புதுக்கோட்டை என போர்டு வைத்து வருவதால் விவசாயிகளுக்கு தெரியவில்லை. எனவே புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகம் என போர்டு வைத்து பஸ்சை இயக்க வேண்டும் என்றார். பயிர் காப்பீட்டு தொகை

விவசாயி சண்முகம், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குளங்கள் அனைத்தும் அளந்து கல் நட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். விவசாயி முத்துராசு, புதுக்கோட்டை மற்றும் திருவரங்குளம் ஒன்றியங்களில் உள்ள விவசாயிகளுக்கு இதுவரை பயிர் காப்பீட்டு தொகை வழங்கப்படவில்லை. எனவே பயிர் காப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். விவசாயி துரைமாணிக்கம், கூட்டுறவு சங்கங்களில் மண்எண்ணெய், சர்க்கரை, உப்பு போன்ற பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். எனவே இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் ஆவுடையார்கோவில் பகுதியில் கேல்வரகு, கம்பு போன்ற தானியங்களை சாகுபடி செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்றார். இலவச மின் இணைப்பு

விவசாயி சேகர், புதுக்கோட்டை மாவட்டத்தில் இலவச மின் இணைப்பு மிகவும் குறைவாக வழங்கப்பட்டு உள்ளது என்றார். தொடர்ந்து கூட்டத்தில் விவசாயிகள் பலர் பேசினார்கள். கூட்டத்தில் மின் வாரிய அதிகாரிகளுடன் விவசாயிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கூட்டத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில்

தயாரித்த திட்ட செயல்பாடுகள் குறித்த விளக்க கையேட்டை கலெக்டர் கணேஷ் விவசாயிகளுக்கு வழங்கினார்.

**கூட்டுறவு வங்கிகளில் மத்திய காலக்கடன் வட்டியை குறைக்க வேண்டும்**



திண்டுக்கல்

கூட்டுறவு வங்கிகளில் மத்திய காலக்கடன் வட்டியை குறைக்க வேண்டும் என்று, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

<u>குறைதீர்க்கும் கூட்டம்</u>

திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் ஹரிகரன் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் நாகேந்திரன், வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் பழனிவேலு மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்த கோரிக்கைகள் விவரம் வருமாறு:–

<u>கூட்டுறவு கடன்</u>

கூட்டுறவு வங்கிகளில் மத்திய கால கடனுக்கு 14 சதவீதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. அதேபோல் கடன் தொகையில் 25 சதவீதம் உரம்

வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகின்றனர். கடனுக்கான வட்டி வீதத்தை குறைப்பதோடு, உரம் வாங்கும்படி கட்டாயப்படுத்தக்கூடாது. தமிழ்நாட்டில் இருந்து செல்லும் காய்கறிகளில் நச்சுத்தன்மை இருப்பதாக கேரளாவில் தடை விதித்து, விலையை குறைக்க முயற்சி செய்கின்றனர். மேலும், கேரளாவில் மாடித்தோட்டங்கள் அமைப்பதை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனால் தமிழக விவசாயிகள் பாதிக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யானைகள் அட்டகாசம்

நிலக்கோட்டையில் 11–ம் கால்வாயில் மதகு இல்லாததால் விவசாயிகள் தண்ணீர் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். ஆனால், மதகு திறப்பாளர் எனக்கூறி ஒருவருக்கு சம்பளம் கொடுப்பதாக கூறப்படுவதை விளக்க வேண்டும். மதகு அமைத்து விவசாயத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும்.

கொடைக்கானலில் 7 யானைகள் 15 நாட்களுக்கு மேலாக முகாமிட்டுள்ளன. இதனால் விவசாய பயிர்கள் சேதமாகின்றன. யானைகளை விரட்டுவதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க தயாராக இருக்கின்றனர். வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நத்தம் பகுதியில் சிறுமலை அடிவாரத்தில் காட்டெருமைகள் மா மரங்களை நாசப்படுத்தி வருகின்றன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதோடு, காட்டெருமைகள் விளைநிலங்களுக்குள் புகுவதை தடுக்க வேண்டும். மேற்கண்டவை உள்பட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் தெரிவித்தனர்.

இழப்பீடு

இதற்கு பதில் அளித்து கலெக்டர் ஹரிகரன் பேசுகையில், விவசாயிகளின் நலனுக்காகவே கூட்டுறவு வங்கிகள் செயல்படுகின்றன. வட்டி விகிதத்தை குறைப்பது தொடர்பாக விவசாயிகளின் கோரிக்கை பரிசீலனைக்கு அனுப்பப்படும். விவசாய கடனை முறைகேடாக பயன்படுத்தக் கூடாது என்பதற்காக தான் உரம் வாங்கும்படி வலியுறுத்தப்படுகிறது.

கொடைக்கானலில் சுற்றித்திரியும் யானைகளை விரட்டுவதற்கு வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுமலை அடிவாரத்தில் வனவிலங்குகளை வெளியேறுவதை தடுக்க அகழிகள் வெட்டப்பட உள்ளன. மேலும், வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தொடர்பாக இழப்பீடு கேட்டு மனு கொடுக்கலாம்.

இவ்வாறு கலெக்டர் ஹரிகரன் பேசினார்.

குடும்பத்தினருடன் வந்து கதறி அழுத முன்னாள் ராணுவவீரர்

நத்தம் தாலுகா வேலாயுதம்பாளையத்தை சேர்ந்தவர் ராமசாமி (வயது 65). முன்னாள் ராணுவ வீரரான இவர், தனது மனைவி செல்லம்மாள், மகன் பாலமுருகன், மருமகள் சுதா, பேரன் நாராயணன் ஆகியோருடன் வந்து கண்ணீர் மல்க ஒரு புகார் மனு அளித்தார்.

அப்போது தான் விவசாயம் செய்து வந்த நிலத்தில் இருந்த மரங்களை, வருவாய்த்துறை அதிகாரிகள் பிடுங்கி அகற்றி விட்டதாக கூறி கதறி அழுதார். இதுபற்றி விசாரணை நடத்தி தக்க நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் ஹரிகரன் கூறினார்.

முன்னாள் ராணுவவீரர் ராமசாமி கூறுகையில், கரந்தமலை அடிவாரத்தில் 2.84 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் செய்துள்ளேன். இதில் 1½ ஏக்கர் புறம்போக்கு நிலம் ஆகும். அதில் மா, தென்னை மரங்களை வளர்த்து வந்தேன். இந்த நிலத்தை ஊருக்கு தரும்படி வற்புறுத்தி கடந்த 2 ஆண்டுக்கு முன்பு சிலர் தீ வைத்தனர். அதுதொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளேன். இந்த நிலையில் வருவாய்த்துறை அதிகாரிகள் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதாக கூறி மா, தென்னை மரங்களை பிடுங்கி விட்டதோடு, மோட்டார் அறையையும் இடித்து தள்ளிவிட்டனர், என்றார்.

## 500 கிலோ கலப்பட தேயிலைத்தூள் பாக்கெட்டுகள் பறிமுதல் உணவு பாதுகாப்பு அதிகாரி நடவடிக்கை



கடலூர்

கடலூர் மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரி ராஜா, கடலூர் முதுநகரில் கிட்டங்கியில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த 500 கிலோ கலப்பட தேயிலைத்தூளை பறிமுதல் செய்து, கிட்டங்கியை பூட்டி 'சீல்' வைத்தார்.

<u>ரகசிய தகவல்</u>

கடலூர் முதுநகரில் உள்ள ஒரு கிட்டங்கியில் கலப்பட தேயிலைத்தூள் பதுக்கி வைக்கப்பட்டு இருப்பதாக உணவு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரி டாக்டர் ராஜா தலைமையில் வட்டார உணவு பாதுகாப்பு அதிகாரிகள் நல்லதம்பி, சுப்பிரமணியன், நந்தக்குமார் ஆகியோர் நேற்று அதிகாலை 5 மணிக்கு முதுநகர் இம்பீரியல் சாலையில் உள்ள கிட்டங்கிக்கு சென்றனர். அப்போது டீக்கடைகளுக்கு தேயிலை பாக்கெட்டுகளை சப்ளை செய்வதற்காக கிட்டங்கி திறந்திருந்தது. உடனடியாக டாக்டர் ராஜா தலைமையிலான அதிகாரிகள் கிட்டங்கிக்குள் சென்று தேயிலைத்தூள் பாக்கெட்டில் இருந்து சிறிது தேயிலைத்தூளை எடுத்து தண்ணீரில் போட்டு சோதனை செய்தனர். இதில் தேயிலைத்தூளில் நிறத்துக்காக வேறுபொருட்களை கலப்படம் செய்து இருப்பது தெரியவந்தது. <u>கிட்டங்கிக்கு 'சீல்'</u>

இதனால் சென்னை கிண்டியில் உள்ள ஆய்வுக்கூடத்துக்கு அனுப்புவதற்காக தேயிலை பாக்கெட்டுகளின் மாதிரிகளை எடுத்துக்கொண்டு தேயிலைத்தூள் கிட்டங்கியை பூட்டி 'சீல்' வைத்தார்.

இதுபற்றி டாக்டர் ராஜா கூறுகையில், கடலூர் முதுநகரில் உள்ள கிட்டங்கியில் கலப்படதேயிலைத்தூள் இருப்பதாக கிடைத்த ரகசிய தகவலைத்தொடர்ந்து அதிகாலை 5 மணிக்கு கிட்டங்கியை சோதனையிட்டு 500 கிலோ கலப்படதேயிலைத்தூளை பறிமுதல் செய்துள்ளோம். இதன் மாதிரியை சென்னை கிண்டியில் உள்ள ஆய்வுக்கூடத்துக்கு அனுப்ப உள்ளோம். அங்கிருந்து 14 நாட்களில் பரிசோதனை முடிவுகள் வந்துவிடும். அதன்அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும். இந்த கிட்டங்கியை மாறன் என்பவர் நடத்தி வந்துள்ளதாக தெரியவந்துள்ளது. அவரிடம் விசாரித்ததில், இந்த போலி தேயிலைத்தூள்கள் கோவையில் இருந்து வருவதாக தெரிவித்தார். இன்று(அதாவது நேற்று) 100 கிலோ தேயிலைத்தூள் கொண்டு வர ஆர்டர் போட்டு இருந்ததாகவும், ஆனால் வரவில்லையென்றும் தெரிவித்தார். <u>கடும் நடவடிக்கை</u>

கோவை மற்றும் சென்னையில் இருந்து தமிழகம் முழுவதும் கலப்படத் தேயிலைத்தூள்கள் சப்ளை செய்யப்படுவதாக தெரிகிறது. போலி தேயிலைத்தூளை பஸ்நிலையங்கள் மற்றும் சாலையோரங்களில் டீக்கடை வைத்துள்ளவர்கள் வாங்கி பயன்படுத்துகிறார்கள். கலப்பட தேயிலைத்தூளை பொதுமக்கள் எளிதில் கண்டு கொள்ளலாம். நல்லதேயிலைத்தூளை பச்சைத்தண்ணீரில் போட்டால் நிறம் வராது, ஆனால் கலப்பட தேயிலைத்தூளை பச்சைத்தண்ணீரில் போட்டால் நிறம் வரும். இதன் மூலம் எளிதில் கண்டுகொள்ளலாம். கலப்படதேயிலைத்தூளில் டீ போட்டுக்குடித்தால் புற்றுநோய் வரும் ஆபத்து உள்ளது. எனவே டீக்கடைக்காரர்கள் கலப்படத்தேயிலைத்தூளை வாங்கி பயன்படுத்தாதீர்கள். இதை மீறி கலப்படதேயிலைத்தூளை பயன்படுத்துகிறவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**அமராவதி வனச்சரகத்தில் மரம் நடும் திட்டத்தில் தயார் நிலையில் 55 ஆயிரம் மரக்கன்றுகள்**



மரங்கள் மனிதர்களின் நண்பர்கள் என்ற அடிப்படையில் மரம் வளர்ப்பதில் அரசு அக்கறை செலுத்தி வருகிறது. அந்த வகையில் தமிழகம் முழுவதும் சமூக ஆர்வலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பள்ளி, கல்லூரிகளின் மூலம் மரங்கள் நடப்பட்டு வருகிறது. அமராவதி வனச்சரகத்தில் ஈட்டி, தேக்கு, நீர்மருது, வேம்பு, குமிழ் உள்ளிட்ட மரக்கன்றுகளும், கொய்யா, நாவல், இலந்தை மாதுளை, பலா உள்ளிட்ட பழவகை மரங்கள் உள்ளிட்ட 55 ஆயிரத்து 743 மரக்கன்றுகள் தயார் நிலையில் நாற்றாங்காலில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து வனத்துறையினர் கூறுகையில், 'தமிழகம் முழுவதும் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கும் திட்டம் மாபெரும் மரம் நடும் திட்டம் 2015–16' என்ற பெயரில் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கென பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட மரக்கன்றுகள் நாற்றங்காலில் வைத்து பராமரிக்கப்படுகிறது. இவை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளுக்கு விரைவில் இலவசமாக வழங்கப்பட உள்ளது. அவர்கள் இதனை

தேவையான பகுதிகளில் நட்டு பராமரிக்க வேண்டும். இதன்மூலம் பசுமையான தமிழகத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் 31-ந்தேதி நடக்கிறது**




தஞ்சையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகிற 31-ந்தேதி நடக்கிறது. விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப்பதாவது:- விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வருகிற 31-ந்தேதி காலை 10 மணிக்கு தஞ்சை மாவட்ட கலெக்டர்அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. கூட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு திட்ட விளக்கம் அளிக்கப்பட உள்ளது. கூட்டத்தில் கலந்து கொள்ளும் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் நீர்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துக்களை மட்டும் தெரிவிக்க வேண்டும்.

விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் தங்களது பெயர், ஊர் மற்றும் தாலுகா விவரத்தை 31-ந்தேதி காலை 9 மணி முதல் 10 மணிக்குள் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்து கணினியில் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்துள்ள விவசாயிகளில் ஒவ்வொரு தாலுகாவிற்கும் முதல் 2 பேர் மட்டுமே தங்களது கருத்துக்களை தெரிவிக்க அனுமதிக்கப்படுவர். மேலும் விவசாயிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்களை கணினியில் பதிவு செய்து ஒப்புதல் பெற்ற பின் மனுக்களை அளிக்க வேண்டும். எனவே விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த கருத்துக்களை கோரிக்கைகளாக தெரிவித்து பயன்பெறலாம். மேற்கண்டவாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் மேட்டூர் அணை ஆகஸ்டு முதல் வாரத்தில் திறக்க வாய்ப்பு விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் அதிகாரி தகவல்**



மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் அணையை ஆகஸ்டு முதல் வாரத்தில் திறக்க வாய்ப்புள்ளதாக சேலத்தில் நடந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் அதிகாரி தெரிவித்தார்.

<u>விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்</u>

சேலம் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். கூட்டம் தொடங்கியதும் வேளாண்துறையை சார்ந்த அதிகாரிகள் தங்களுடைய திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தனர். இதைத்தொடர்ந்து வேளாண்மைதுறை இணை இயக்குனர் இளங்கோ பேசியதாவது:– சேலம் மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த ஆண்டை விட இந்தாண்டு விவசாய உற்பத்தி சிறப்பாக உள்ளது. மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து காரணமாக நீர்மட்டம் உயர்ந்து உள்ளது. தற்போது நீர்மட்டம் 92 அடியாக உள்ளது. ஆகையால் மேட்டூர் அணையை ஆகஸ்டு முதல் வாரத்தில் திறக்க பொதுப்பணித்துறை சார்பில் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயம் நன்றாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

<u>முத்தரப்பு கூட்டம்</u>

இதையடுத்து கூட்டத்தில் விவசாயிகள் பேசிய விவரம் வருமாறு:–

விவசாயி சண்முகம் பேசும் போது, 'பால் கொள்முதலை அதிகரிக்க சத்துணவில் பாலை சேர்க்க வேண்டும். குளம் மற்றும் புறம்போக்கு நிலங்களில் சீமகருவேல மரங்கள் அதிகளவு வளர்ந்து காணப்படுவதால் மழை அளவு குறைந்து உள்ளது. எனவே சீமகருவேல மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார். கோவிந்தராஜ் பேசும் போது, 'சேலம் மாவட்டத்தில் அதிகளவு மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் இங்கு மரவள்ளிக்கிழங்குக்கு கடந்த 2 ஆண்டுகளாக விலை இல்லை. விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். நாமக்கல் மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்குக்கு விலை நிர்ணயம் செய்ய முத்தரப்பு கூட்டம் நடத்தி உள்ளனர். அதேபோல், சேலம் மாவட்டத்திலும் விரைவில் முத்தரப்பு கூட்டம் நடத்தி விலை நிர்ணயம் செய்ய வேண்டும்' என்றார். <u>அரசாணைக்கு எதிரானது</u>

ஜெயராமன் பேசும் போது, 'தண்ணீரின் வரத்து அதிகப்படியாக இல்லாத போதும் கரியகோவில் அணையின் மதகை அதிகாரிகள் மூடி வைத்துள்ளனர். இது அரசாணைக்கு எதிரானது. அணையின் மதகை மூடி வைக்கக் கூடாது என்று விவசாயிகள் பலமுறை கோரிக்கை வைத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. மனித உரிமை ஆணையமும்

இந்த செயல் வன்கொடுமைக்கு எதிரானது என்று கூறியும் அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை. இதுதொடர்பாக அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கும் போது கடந்த 2005–ம் ஆண்டு தெரிவித்த பதிலையே மீண்டும் இப்போதும் தெரிவிக்கின்றனர்' என்று கூறினார்.

இதற்கு கலெக்டர் சம்பத் பதில் அளிக்கும் போது, 'இந்த பிரச்சினை தொடர்பாக அடுத்த கூட்டத்தில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பதில் அளிப்பார்' என்றார்.

கமிட்டி அமைப்பு

கூட்டத்தில் மற்ற விவசாயிகள் பேசும் போது, 'மழைக்காலம் தொடங்க உள்ளதால் விவசாயிகளுக்கு உரம் தட்டுப்பாடின்றி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். 100 நாட்கள் வேலைவாய்ப்பு திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களை விவசாய பணிகளுக்கு அமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். வசிஷ்டநதி மற்றும் ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

இதற்கு கலெக்டர் சம்பத் பதில் அளித்து கூறும் போது, 'ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு என்று கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் சம்பந்தப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு நடவடிக்கை மேற்கொள்வார்கள். மேலும் விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார். கூட்டத்தில், தோட்டக்கலை துணை இயக்குனர் கண்ணன், மண்டல இணை பதிவாளர்(கூட்டுறவு சங்கங்கள்) சீனிவாசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பண்ணைய முறையை பின்பற்றி விவசாயிகள் லாபம் பெறலாம் உழவர்**

**பயிற்சி நிலையம் ஆலோசனை**

சிவகங்கை, : விவசாயிகள் ஒருங்கிணைந்த பண்ணைய முறையினை கடைப்பிடித்து வேளாண்மை உற்பத்தியை பெருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். உழவர் பயிற்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: விவசாய பொருட்களின் உற்பத்தியினை பெருக்குவதற்கும், விவசாயிகளின் வருமானத்தை அதிகப்படுத்திடவும் ஒருங்கிணைந்த பண்ணையம் சிறந்த வழிமுறையாகும். வேளாண் சார்ந்த

தொழில்களான கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, காளான் வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் உணவு பதப்படுத்துதல் ஆகியவற்றை விஞ்ஞான முறையில் மேற்கொண்டு குறைந்த செலவில் நிலையான வருமானம் பெறலாம். தோட்டக்கலை மற்றும் மானாவாரி நிலங்களில் ஒருங்கிணைந்த பண்ணையம் மேற்கொள்ள நல்ல வாய்ப்புகள் உள்ளது. இம்முறையில் பண்ணை கழிவுகள் மறு சுழற்சி செய்யப்பட்டு இயற்கை உரமாக பயன்படுவதால் இடுபொருட்கள் தேவை வெகுவாக குறையும்.

பயிர் சாகுபடியோடு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேளாண் சார்ந்த தொழில்களை தேர்ந்தெடுத்து ஒருங்கிணைத்து செயல்படுத்தும் போது தனிப்பயிர் மூலம் கிடைக்கும் வருமானத்தை விட கூடுதல் வருமானம் பெறலாம். ஆண்டுதோறும் வறட்சியால் ஏற்படும் எதிர்பாராத திடீர் இழப்புகளை தவிர்த்திட சிறந்த மாற்றுத்திட்டம் ஒருங்கிணைந்த பண்ணையம் ஆகும்.
இப்பண்ணைய முறையில் தோட்டக்கால் நிலங்களில் நீர்பாசன வசதிக்கு ஏற்ப விவசாயி தேர்வு செய்யும் வேளாண் பயிருடன் (சோளம் + துவரை, மக்காச்சோளம் + தட்டைபயறு - 2.5 ஏக்கர்) 0.5 ஏக்கரில் கம்பு, நேப்பியர் ஒட்டு தீவனப் புல் சாகுபடி செய்து 6 கலப்பின கறவை மாடுகள் மற்றும் 4 அல்லது 8 சென்ட்டில் காய்கறித்தோட்டம் அமைக்கலாம். இதனுடன் 4 தேனீ பெட்டிகள் வைத்து தேன் உற்பத்தி செய்யலாம். மாடு வளர்ப்பின் மூலம் கிடைக்கும் சாணத்தைக் கொண்டு 2 க.மீ உற்பத்தி திறன் கொண்ட சாண எரிவாயு கலன் அமைத்து சுத்தமான எரிவாயுவும், இயற்கை உரமும் பெறலாம். 10+1 என்ற எண்ணிக்கையில் ஆடு, 30 நாட்டுக்கோழி வளர்க்கலாம். பயிர் கழிவுகளைக் கொண்டு தினமும் 2 கிலோ உணவுக் காளான் மற்றும் 20 பாட்டில் காளான் விதைகள் உற்பத்தி செய்யலாம். மேற்கொண்ட வழிமுறைகளை கடைபிடிப்பதன் மூலம் ஆண்டுக்கு சராசரியாக ரூ.75 ஆயிரம்-நிகர லாபம் பெறலாம்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மண்புழு உரம் தயாரிப்பு கருத்தரங்கம்**

கரூர்,:கரூர் அரசு கலைக் கல்லூாரியில் மண்புழு உரம் தயாரிப்பு குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது.அரசு கலைக் கல்லூாரி வளாகத்தில்

தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்ற நிதியுதவியுடன் நடைபெற்ற இந்த கருத்தரங்கிற்கு கல்லூரி முதல்வர் பாரி தலைமை வகித்தார். விலங்கியல் துறைத் தலைவர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். பேராசிரியர் ரமேஷ் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து பேசினார். தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கியல் அறிவியல் பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் அகிலா, கால்நடை கழிவுகளைக் கொண்டு மண்புழு உரம் தயாரிக்கும் முறை, அதில் உள்ள சத்துக்கள், பயன்கள், மண்புழுக்களின் வகைகள், பஞ்சகாவ்யா, இயற்கை பூஞ்சை கொல்லி தயாரிப்பு முறை, அவற்றை இயற்கை வேளாண்மையில் பயன்படுத்துதலின் அவசியம் போன்றவை குறித்து விளக்கினார். இந்த கருத்தரங்கில் பரணி வித்யாலயா பள்ளி மாணவர்களும், ரோட்டரி கிளப் உறுப்பினர்களும், சுய உதவிக் குழுவினர்களும், தாவரவியல், விலங்கியல்துறை உட்பட அனைத்து துறை மாணவர்களும், பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். இயற்பியல் துறை இணை பேராசிரியர் கந்தசாமி சான்றிதழ்கள் வழங்கினார். விலங்கியல் துறை பேராசிரியர் மீனாட்சி நன்றி கூறினார்.

**திருந்திய நெல் சாகுபடியில் தரமான விதை நெல் உற்பத்தி முறைகள்**

கறம்பக்குடி, : கறம்பக்குடி வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடியில் தரமான விதை நெல் உற்பத்தி முறைகள் பற்றி வேளாண் அதிகாரி விளக்கம் அளித்துள்ளார்.இதுகுறித்து கறம்பக்குடி வேளாண் உதவி இயக்குநர் மனோகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருந்திய நெல்சாகுபடி தரமான நெல்விதை உற்பத்தி முறையில் நெல்விதை என்பது பாரம்பரிய விதையாகவும், சுத்தம் உடையதாகவும் இருக்க வேண்டும். தேவையான நல்லமுளைப்பு திறன் கொண்டதாகவும் இருக்க வேண்டும். அனுமதிக்கப்படும் ஈரத்தன்மை உடையதாக இருக்க வேண்டும் மற்றும் பூச்சி நோய் தாக்காத விதையாக இருக்க வேண்டும். மேலும் நெல் விதைக்கு ஏற்ற பருவமாக குறுவை பயிருக்கு ஜூன், ஜூலையும் சம்பா பருவத்திற்கு ஆகஸ்ட், செப்டம்பரும் ஆகும். மேலும் உயர் விளைச்சல் ரகங்களாக குறுவை பருவத்திற்கு ஆடுதுறை 37, 36 நெல்லும், சம்பா பருவத்திற்கு ஆடுதுறை 39 வெள்ளை பொன்னி, சம்பா மசூரி, சி.ஆர்1009ம் இவை அனைத்திற்கும் விதை

அளவு ஏக்கருக்கு 3 கிலோ போதுமானதும் சான்றுகள் பெற்ற விதைகளையே பயன்படுத்த வேண்டும்.
விதை நேர்த்தியாக விதைகளை நோய்களிடமிருந்து பாதுகாத்திட 1 ஏக்கருக்கு தேவையான 3 கிலோ விதையுடன் 30 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் என்ற உயிர் பூஞ்சான் கொல்லியை கொண்டு விதை நேர்த்தி செய்து பின் விதைக்கவும் மேலும் விதைப்புக்கு முன் முளைகட்டி விதைகளை தலா 1 பாக்கெட் (200கிராம்) அஸோஸ் ஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். மேலும் நாற்றங்கால் பராமரிப்பாக 1 ஏக்கர் நடவுக்கு 1 சென்ட் (40 ச.மீ.) நாற்று மேடை போதுமானது. நடவு வயலின் ஓரத்தில் வடிகால் வசதியுள்ள இடத்தில் 1*5 மீ. அளவுள்ள மேடைகளை அருகிலிருக்கும் மண்ணை எடுத்து 5 செ.மீ உயரத்தில் உருவாக்க வேண்டும். பின்பு நாற்று மேடையில் பிரித்த உர சாக்குகளையோ, பாலிதீன் தாளையோ பரப்பிவிட வேண்டும். மேலும் நடவு வயலை நன்கு சமன்படுத்த வேண்டும். கடைசி உழவின்போது பரிந்துரைக்கப்பட்ட மணிச்சத்து மற்றும் 50 சதவீதம் சாம்பல் சத்து உரத்தினை ஆப்பர் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் போன்ற உரத்தினை இடவேண்டும். மேலும் நடவு வயலில் நீர் வடியுமாறு சிறு வாய்க்கால்களை உருவாக்கிட வேண்டும். நடவு வயலில் இளம் நாற்றுகளை 25 செ.மீ 25 செ.மீ இடைவெளியில் சதுர நடவு செய்ய வேண்டும். களை எடுப்பின் போது திருந்திய நெல்சாகுபடி முறையில் கோனோவீடர் கொண்டு நட்ட 10, 20, 30, 40வது நாட்களில் பயிர்களுக்கு இடையே குறுக்கும் நெடுக்குமாக முன்னும் பின்னுமாக நன்றாக கிளறிவிட வேண்டும். மேலும் களைக்கருவியினை உபயோகித்த பின் களைகளை கையால் எடுத்துவிட வேண்டும். நீர் பாய்ச்சுதல் முறையில் பஞ்சு கட்டும் தருணம் வரை 2.5 செ.மீ கட்டிய நீர் மறைத்து மண்ணில் மேற்பரப்பில் இலேசான கீறல் வெடிப்புகள் தோன்றிய பின்னர் மறுபடியும் 2.5 செ.மீ. உயரத்திற்கு நீர் கட்ட வேண்டும். நடவு செய்த 15நாள் முதல் மேலுரமாக 26 கிலோ யூரியா இடவேண்டும். தழைச்சத்து இடவேண்டும். அடியுரம் இட்டது போக மீதமுள்ள 50சத பொட்டாஷ் உரத்தை பூக்கரு உருவாகும் சமயத்தில் (4150 நாட்கள்) இடவேண்டும். பயிரை பாதுகாக்க ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு

முறைகளை கடைப்பிடிக்க பூச்சி நோய்களை மேலாண்மை செய்யலாம். இவ்வாறு திருந்திய நெல் சாகுபடியில் தரமான நெல்விதை உற்பத்தி முறைகளை பயன்படுத்தி திருந்திய நெல்சாகுபடி முறையில் அதிகமான விளைச்சலை உருவாக்கலாம் என்று கறம்பக்குடி வட்டார விவசாயிகள் இந்த முறைகளை பயன்படுத்தி பயன்பெறலாம். இவ்வாறு அவர் அதில் கூறியுள்ளார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

அரியலூர், : அரியலூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 30ம் தேதி (வியாழன்) நடைபெறுகிறது.அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் கூட்ட மன்றத்தில் வரும் 30ம் தேதி காலை 10 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற இருக்கிறது. கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுடன் விவாதிக்கப்படும். எனவே அன்றைய தினம் விவசாய சங்க பிரதிநிதிகள் தவறாமல் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என மாவட்ட கலெக்டர் அலுவலக செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நிலத்தடிநீர் குறைவால் காய்கறி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**

திருவள்ளூர், : திருவள்ளூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடிநீர் குறைவால் காய்கறி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.திருவள்ளூர் மாவட் டத்தில் பருவமழை பொய்த்ததாலும், ஆறு மற்றும் ஏரிகளில் தொடரும் மணல் திருட்டினாலும் நிலத்தடிநீர் முற்றிலும் குறைந்தது. இதனால் பல அடி ஆழத்துக்கு போர்வெல் அமைத்தும் விவசாயம் செய்ய போதிய நீர் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டனர்.இந்நிலையில், திருவள்ளூர் அடுத்த வெள்ளேரிதாங்கல், கொப்பூர், அரண்வாயல்குப்பம் உட்பட பல்வேறு கிராமங்களில், காய்கறி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இப்பகுதி விவசாயிகள் தங்களது விலை நிலங்களில் பாகற்காய், புடலங்காய், பீர்க்கங்காய் ஆகிய காய்கறி செடிகளை பயிரிட்டு உள்ளனர்.இந்த கொடிகள் படரவும், காய்கறிகளை பறிக்கவும் வசதியாக தோட்டத்தில் பந்தல்களை அமைத்து உள்ளனர். இதில் காய்க்கும் காய்கறிகளை, அவர்களது குடும்பத்தினர் பறித்து சென்னை கோயம்பேடு மார்கெட்டிற்கு கொண்டுசென்று விற்று வருகின்றனர்.இதுகுறித்து காய்கறி பயிரிட்டுள்ள விவசாயி ஒருவர் கூறுகையில், ''பருவமழை பொய்த்ததால் நிலத்தடிநீர் குறைந்து விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வப்போது பெய்யும் சிறுமழையை நம்பி காய்கறி பயிரிட்டுள்ளேன். இதன்மூலம் குடும்ப செலவை சரிசெய்து வருகிறோம்'' என்றார்.

**குந்தா விவசாயிகளுக்கு 48 ஆயிரம் இலவச மரக்கன்று**

மஞ்சூர், : குந்தா பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு வனத்துறை சார்பில் 48 ஆயிரம் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டம் தெற்கு வனக்கோட்டத்திற்குட்பட்ட குந்தா வனச்சரகத்தில் பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தனியார் பட்டா நிலங்களில் மரம் வளர்ப்பு திட்ட்ம் மற்றும் தமிழக முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் மரங்கள் வளர்ப்பு திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் 2015-16ம் ஆண்டிற்கு குந்தா பகுதியை சேர்ந்த சிறு விவசாயிகளுக்கு 48 ஆயிரம் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. இதுகுறித்து குந்தா ரேஞ்சர் ராமச்சந்திரன் கூறியதாவது: மாவட்ட வன அலுவலர் பத்ரசாமி உத்தரவின் பேரில் தெற்கு வனக்கோட்டம் குந்தா வனச்சரகத்தில் தனியார் பட்டா நிலங்களில் மரம் வளர்ப்பு திட்டம் மற்றும் முதல்வர் பிறந்தநாளை முன்னிட்ட மாபெரும் மரம் வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டங்களின் மூலம் நடப்பாண்டு சிறு விவசாயிகளுக்கு இலவசமாக 48 ஆயிரம் சில்வர்ஓக் மற்றும் பல வகையிலான மரக்கன்றுகள் வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 200

மரக்கன்றுகள் வீதம் அதிகபட்சம் 5 ஏக்கர் வரை வழங்கப்படும். விவசாயிகளுக்கு வழங்குவதற்காக குந்தா வனச்சரகத்திற்கு சொந்தமான பொங்கலட்டி நர்சரியில் மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளது. இவ்வாறு ரேஞ்சர் ராமச்சந்திரன் தெரிவித்தார்.

**65 சதவீத தேயிலை தூள் விற்பனை**

குன்னூர், : குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 30வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மொத்தம் 4 லட்சத்து52 ஆயிரத்து 666 கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 2 லட்சத்து 63ஆயிரத்து 345 கிலோவும், டஸ்ட் ரகம் 1 லட்சத்து 89ஆயிரத்து 321 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று தரமான தேயிலை தூளை மட்டுமே கொள்முதல் செய்ததால் 60 சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடன் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3 விலை சரிந்தது. இதன்படி இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.40 முதல் ரூ.45, உயர் வகை ரூ.52 முதல் ரூ.55, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ43 முதல் ரூ.48, உயர் வகை ரூ.60 முதல் ரூ.65 வரை விலை கிடைத்தது.

**திருப்பனந்தாள் ஒழுங்குமுறை கூடத்தில் குவின்டால் பருத்தி ரூ.4,196க்கு**

**ஏலம்**

திருவிடைமருதூர், : திருப்பனந்தாள் ஒழுங்குமுறை கூடத்தில் குவின்டால் பருத்தி சராசரியாக ரூ.4,196க்கு ஏலம் போனது. தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தில் ஏலம் நடந்தது. இதில் முல்லங்குடி, மட்டியூர், திருலோக்கி, பட்டம், திருப்பனந்தாள், சேங்கனூர் உள்ளிட்ட சுற்று பகுதிகளை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் 198 தாட்டுக்களில் பருத்தி பஞ்சுகளை கொண்டு வந்திருந்தனர். விழுப்புரம், திருப்பூர், தேனி, செம்பனார்கோயில் பகுதிகளிலிருந்து வந்திருந்த 8க்கும் மேற்பட்ட வியாபாரிகள் தாங்கள் கேட்கும் விலையை மறைமுகமாக குறித்து

ஏலப்பெட்டியில் போட்டனர். பின்னர் ஒழுங்குமுறை விற்பனை கூட மேற்பார்வையாளர் அன்பழகன் முன்னிலையில் பிரித்து பார்க்கப்பட்டது. அப்போது வியாபாரிகள் அதிகபட்ச ஏலத்தொகையாக குவின்டாலுக்கு ரூ.4,327, குறைந்தபட்சமாக ரூ.4,009, சராசரியாக ரூ.4,196க்கு விற்பனையானது. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், மின் தட்டுப்பாட்டால் பல்வேறு இன்னல்களை சந்தித்தோம். கடந்தாண்டு அதிகபட்சமாக ரூ.5.500 லிருந்து ரூ.6 ஆயிரம் வரை விலைபோனது. இந்தாண்டு ரூ.3,600 முதல் ரூ.4350 வரை விலை போகிறது. தொடர் மழையால் பாதிப்புக்கு பிறகு முன்பட்ட பருத்தி செடிகளை மட்டும் தான் காப்பாற்ற முடிந்தது. குவின்டால் குறைந்தபட்சமாக ரூ.6 ஆயிரம் முதல் ரூ.7 ஆயிரம் வரை விலை போனால் மட்டுமே கட்டுப்படியாகும் என்றார்.

**அட்மா திட்டத்தின்கீழ் விதை உற்பத்தியாளர்களுக்கு ஒருநாள் பயிற்சி முகாம்**

பட்டுக்கோட்டை, :அட்மா திட்டத்தின்கீழ் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின்கீழ் திருவோணம் மற்றும் ஒரத்தநாடு வட்டாரங்களை சேர்ந்த 45 விதை பண்ணை விவசாயிகளுக்கு ஒரு நாள் சிறப்பு பயிற்சி ஒரத்தநாட்டில் நடந்தது. திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வரவேற்றார். அட்மா திட்டத்தின்கீழ் என்னென்ன இனங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றை விவசாயிகள் எப்படியெல்லாம் முறையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்பது குறித்து அட்மா திட்ட துணை இயக்குநரும், உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநருமான கிருஷ்ணகுமார் பேசினார். பல்வேறு பயிர்களின்கீழ் விதைப்பண்ணை திடல்கள் அமைக்கும்போது கடைபிடிக்கப்பட வேண்டிய விதை சான்று நடைமுறை, உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்து தஞ்சை மாவட்ட விதை சான்று விதை உதவி இயக்குநர் மணிமாறன் விளக்கினார். வல்லுநர் விதை, ஆதாரநிலை விதை, சான்று நிலை விதை மற்றும் உண்மை நிலை விதைகள் உற்பத்தி செய்வது தொடர்பான தொழில்நுட்பங்கள் மற்றும் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய

நெல் ரகங்கள் குறித்து திருவோணம் மற்றும் ஒரத்தநாடு வட்டார விதைச்சான்று அலுவலர் தயாளன் பேசினார். பல்வேறு பயிர்களின்கீழ் விதைப்பண்ணை அமைக்கும்போது கடைபிடிக்க வேண்டிய பயிர் விலகு தூரம் மற்றும் களவன் நீக்குதல் குறித்து விவரித்து தஞ்சாவூர் தலைமையிட விதை சான்று அலுவலர் லதா பேசினார். ஏற்பாடுகளை திருவோணம் வட்டார வேளாண்மை அலுவலர் முருகேசன், அட்மா திட்ட தொழில் நுட்ப மேலாளர்கள் ராஜாத்தி, முத்துக்குமார், உதவி தொழில்நுட்ப மேலாளர் நெடுஞ்செழியன் மற்றும் ஒரத்தநாடு உதவி விதை அலுவலர் காந்திநாதன் செய்திருந்தனர். ஒரத்தநாடு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பாலசரஸ்வதி நன்றி கூறினார். தஞ்சை, : தஞ்சை பாரத் அறிவியல், நிர்வாகவியல் கல்லூரியில் சாகித்திய அகாடமி சார்பில் வண்டல் வட்டார எழுத்துக்கள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது. சாகித்திய அகாடமியின் தமிழ் ஆலோசனைக்குழு ஒருங்கிணைப்பாளர் நாச்சிமுத்து பேசுகையில், சாகித்திய அகாடமி கடந்த 1954ம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்த அமைப்பு 24 மொழிகளில் இலக்கிய பணி மேற்கொள்கிறது. சிறந்த படைப்புகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது. இதுவரை 5 ஆயிரத்துக்கும் அதிகமான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு ஒரு நூல் என்ற அளவில் வெளியிடப்படுகிறது. இதில் தமிழ்மொழி நூல்கள் தான் அதிகளவில் விற்பனையாகிறது. இதுவரை ரூ.5 கோடிக்கும் மேலாக நூல்கள் விற்பனையாகியுள்ளது என்றார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ராஜேந்திரன், சாகித்திய அகாடமி பொறுப்பு அலுவலர் ராதாகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் காமராசு, பாரத் கல்வி குழுமங்களின் செயலாளர் புனிதா கணேசன் கலந்து கொண்டனர்.

**அட்மா திட்டத்தில் தென்னை பண்ணைப்பள்ளி**

பட்டுக்கோட்டை, :பட்டுக்கோட்டை அடுத்த தாமரங்கோட்டை வடக்கு கிராமத்தில் வேளாண்மைத்துறையின்கீழ் செயல்படும் அட்மா திட்டத்தில் தென்னை பண்ணைப்பள்ளி நடந்தது. பட்டுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் சுப்பையா தலைமை வகித்தார். தென்னையில்

ஊடுபயிர் அமைத்தல் பற்றி தென்னை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் டாக்டர் விஜய் செல்வராஜ் உரையாற்றினார். தென்னை மதிப்பு கூட்டுப்பொருள் தயாரித்தல் குறித்து இந்திய பயிர் பதனீட்டு நிலைய பேராசிரியர் டாக்டர் ஆனந்குமார் விளக்கம் அளித்தார். தென்னை குறித்த திட்டங்கள் பற்றி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை வேளாண்மை அலுவலர் மாலதி எடுத்து கூறினார். நிகழ்ச்சியில் பட்டுக்கோட்டை வேளாண்மை அலுவலர்கள் வெங்கடாசலம், சங்கீதா, தாரா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரவி, ரத்னம் உட்பட மற்றும் பலர் பங்கேற்றனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகிதா நன்றி கூறினார்.

**அறுவடைக்குபின் செய்நேர்த்தி பயிற்சி**

பாபநாசம், : பாபநாசத்தில் தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை, ஆட்மா திட்டம், வேளாண் வணிகத்துறை சார்பில் அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி மற்றும் மதிப்பு கூட்டுதல் பயிற்சி நேற்று நடந்தது. பாபநாசம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் கோபிநாதன் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் வணிகம் நாகராஜன் வரவேற்றார். தொழில்நுட்பம் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் சோழராஜன் பேசினார். நெல்லில் அறுவடைக்குப்பின் மதிப்பு கூட்டுவதன் அவசியம் குறித்து இந்திய உணவு பாதுகாப்பு பதனிடும் கழகம் விரிவுரையாளர் சண்முகசுந்தரம் பேசினார். மேலும் கடலையில் மதிப்பு கூட்டுப்பொருளான மிட்டாய் வகைகள், நெல்லியில் ஊறுகாய், நெல்லிச்சாறு தயாரிப்பு முறைகளை விளக்கினார். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் கரிகாலன், ஆட்மா திட்ட பணியாளர்கள் ஜெயபிரபா, தனசேகரன் செய்திருந்தனர். வேளாண் அலுவலர் கார்த்திக்கேயன் நன்றி கூறினார்.